வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : news@eelanadu.lk    மலர் : 03    25.10.2022 செவ்வாய்க்கிழமை    இதழ் : 320    பக்கங்கள் : 16




## இங்கிலாந்து பிரதமராகிறார் இந்து-ஆசியரான ரிஷி சுனக்!

லண்டன், ஒக். 25

இங்கிலாந்தின் புதிய பிரதமராக ரிஷி சுனக் (வயது - 42) அறிவிக்கப்பட்டுள்ளார். இந்து மதத்தவரான இவர், 1874 ஆம் ஆண்டில் பதவியிலிருந்த யூதரான பெஞ்சமின் டிஸ்ரேலியின் பின்னர் பிரதமர் பதவிக்கு வரும் முதல் சிறுபான்மை இனத்தவராவார்.

மேலும், இந்திய வம்சாவளி

15



## ஜனாதிபதி செயலகத்தில் பறந்தன நந்திக் கொடிகள்!

கொழும்பு, ஒக். 25

இந்து தமிழர்களின் தீபாவளி பண்டிகை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கொண்டாடப்பட்டது.

இதன்போது, செயலகத்தில் நந்திக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. அத்துடன், மின் விளக்குகளாலும் செயலகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இந்துக்களின் மிக

15





## இன்று கிரகணம் யாழில் பார்க்கலாம்!

கொழும்பு, ஒக். 25

இன்று செவ்வாய்க்கிழமை நிகழவுள்ள சூரிய கிரகணத்தை யாழ்ப்பாணத்தில் மிகத்தெளிவாக காண முடியும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன

15

# இந்தியா பயணிக்க ஜனாதிபதி ஆர்வம் அனுமதிக்க பின்னடிக்கும் மோடி அரசு!

கொழும்பு, ஒக்ரோபர் 25

**ஜனாதிபதியாக பதவியேற்ற நாளில் இருந்து இந்தியா செல்ல ரணில் விக்கிரமசிங்க விரும்பியபோதும் அந்த நாட்டு அரசாங்கம் முறையான அழைப்பு விடுக்கவில்லை என்று அரச உயர் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பாராளுமன்றத்தால் தெரிவான நாள்முதல் இந்தியாவுக்கு வருகை தருமாறு அந்த நாட்டு அரசாங்கத்தால் அழைப்பு விடுக்கப்படவில்லை. இதனால், இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையே நெருக்கடி நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்பவர் யாராக இருந்தாலும் முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியாவுக்கு செல்வது வழக்கம். ஏனெனில், இந்தியா இந்தப் பிராந்தியத்தின் முக்கியமான

15



## ஆட்சியில் யார் இருந்தாலும் இனி எம்மை ஏமாற்றமுடியாது

### இப்படி சொல்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஒக். 25

நாட்டின் ஆட்சியில் எவர் இருந்தாலும் எம்மை இனிமேல் ஏமாற்றவே முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகை தினமான நேற்று தமிழ் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு,

தமிழர்களின் வாழ்வில் அமைதி ஏற்பட்டு மக்கள் முன்னேற்றகரமாக வாழக்கூடிய வகையில் இலங்கையில் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும். இந்தப் புதிய அரசமைப்பின்

15



## அரசியல் கைதிகள் மூவர் விடுதலை!

கொழும்பு, ஒக். 25

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கவை படுகொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழ் அரசியல் கைதிகள் எண்மருக்கு தீபாவளி

15

## கிணற்றில் தவறி விழுந்தவரும் காப்பாற்றக் குதித்தவரும் பலி!

### தீபாவளி நாளில் யாழில் துயரம்

வடமராட்சி, ஒக். 25

தோட்டக் கிணற்றில் தவறி விழுந்தவரும் அவரைக் காப்பாற்றுவதற்காக கிணற்றில் குதித்த அவரின் நண்பரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

தீபாவளி பண்டிகை தினமான நேற்று திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் வடமராட்சி - புலோலி தெற்கு உபயகதிர்காமம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், உபயகதிர்காமத்தை சேர்ந்த

15

## ஓட்டோக்களுக்கான எரிபொருள் உயர்கிறது

கொழும்பு, ஒக். 25

முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை முதல் கட்டமாக இரட்டிப்பாக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

மேல் மாகாணத்தில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதலும் ஏனைய மாகாணங்களில் எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி முதலும் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

தற்போது, முச்சக்கர வண்டிகளுக்கு வாராந்தம் 5 லீற்றர் பெற்றோலே கியூ. ஆர். முறைமையில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



தீபாவளி பண்டிகை தினமான நேற்று யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை ஸ்ரீவேங்கடேச பெருமாள் கோயிலில் சிறப்பு வழிபாடுகள் பூசைகள் இடம்பெற்றபோது...!

## மருத்துவமனைகள் முடங்கும் அபாயம்!

### அரச மருத்துவ அதிகாரிகள்

கொழும்பு, ஒக். 25

மருந்து தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் காலங்களில் நாட்டின் அனைத்து மருத்துவமனைகளும் செயலிழக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதய நோய்கான அஸ்பிரின் மருந்தை, வெளியே மருந்தகங்களில் இருந்து பெற வேண்டிய நிலை நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ளது. கொழும்பு தேசிய மருத்துவ மனையில் கடுமையான

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குறித்து இந்தப் பத்தியில் முன்னரும் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தேன்.

அவரின் அரசியல் நிலைப்பாட்டை பலருக்கும் உடன்பாடு இல்லாதது. பலருக்கும் என்று நான் சொல்வது தமிழ்த் தேசிய அரசியலை விரும்புபவர்கள் பற்றியது. ஆனாலும் அவர் மட்டக்களப்பில் அறுபதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றவர் என்பதையும் நாம் மறந்துவிடமுடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து செல்ல முற்பட்டிருக்காவிட்டால் பிள்ளையான் என்ற அந்தப் போராளியும் தொடர்ந்து இயக்கத்தில் இருந்திருப் பார். முள்ளிவாய்க்காலில் என்ன நடந்திருக்கும் என்பதை யும் இங்கே எழுதவேண்டும் என்பதல்ல.

ஆனால், சிறுவர் போராளியாக இயக்கத்தில் இணைந்த அவர், அதிலிருந்து வெளியேறி பின்னர் நடந்தவை இங்கே எழுதித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

கிழக்கு மாகாண முதலமைச்சராக இவர் இருந்தபோது எப்படி பணியாற்றினார் என்பதையே மேலே சொன்னது போல, இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

இப்போது சொல்ல வருவதும் அவர் அண்மையில் ஒரு கூட்டத்தில் தெரிவித்திருந்த விடயங்கள் பற்றியவை தான்.

பாராளுமன்றத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட தேசிய பேரவையில் அவரும் ஓர் உறுப்பினர். பின்னர் அந்த பேரவை இரண்டு உபகுழுக்களை அமைத்திருந்தது வாசகர்களுக்கு தெரிந்ததுதான். அதில் ஒன்று சம்பிக்க ரணவக்க தலைமையிலான உபகுழு. பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வு காண்பதற்கான யோசனைகளை தயாரிப்பதற்கான அந்த உபகுழுவில் சந்திரகாந்தனும் ஓர் உறுப்பினர். பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் இந்த ஊர்க்குருவி அறிந்தவரையில், அவரே மிகக்குறைந்த கல்வித் தகைமையை கொண்டவர். அதற்காக அவரால் கல்வி கற்றிருக்க முடியாது என்பதல்ல. சிறுவயதிலேயே இனத்துக்காக அனைத்தையும் துறந்து தன் வாழ்க்கையை தொலைத்தவர்களில் அவரும் ஒருவர்.

அண்மையில், சம்பிக்க ரணவக்கவை சந்திக்கும் சந்தர்ப்பம் இந்த ஊர்க்குருவிக்கு கிடைத்தது. அப்போது அவர் தெரிவித்த கருத்து ஒன்றே இந்தப் பத்தியை எழுதவேண்டும் என்ற எண்ணத்தையே ஏற்படுத்தியது.

தமது உபகுழுக்களின் கூட்டத்தில் கலந்துகொள்பவர்களில் மிகவும் கல்வி அறிவு குறைந்தவர் பிள்ளையான்தான். ஆனால், அவர் ஒருவர்தான் மிக முக்கியமான - மிகத் தேவையான - கேள்விகளைக் கேட்கிறார். அங்கிருப்பவர்களை எல்லாம் வெட்கப்படும் வகையில் இவரின் கேள்விகள் அமைந்திருக்கின்றன. பல தடவைகள் அவர் என்னை ஆச்சரியப்பட வைக்கிறார் என்றார் சம்பிக்க.

மாகாண முதலமைச்சராக இருந்தபோது தன்னோடு மிகத் திறமையானவர்களை வைத்திருந்தார். அவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடந்ததால் சிறப்பான முதலமைச்சராக அவரால் பணியாற்ற முடிந்தது என்றுதான் அறிந்திருக்கிறேன்.

ஆனால், அவரே தனி ஆளாகக் கலந்துகொள்ளும் கூட்டத்தில் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான கேள்விகளை அவர் கேட்டு திருப்திப்பட்டுக் கொள்வதாக அறிந்தபோது ஆச்சரியமாக இருந்தது.

புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி - வெளியேறி என்றால் அவர்களால் துரோகி ஆக்கப்பட்டு - அவர்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசியல் செய்யத் தொடங்கிய பிள்ளையான் என்ற சந்திரகாந்தன், பின்னர் தான் அமைத்த அரசியல் கட்சிக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்று பெயர் வைத்தபோது ஒரு வகை நெருடலை தந்தது.

இவர் எதற்காக புலிகளின் பெயரை வைக்கிறார் என்பதை புரிந்துகொள்ளவும் அப்போது முடியவில்லை. ஆனால், அதன் அர்த்தம் இப்போதுதான் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

என்னதான் இருந்தாலும் தான் அரசியல் கற்றது அந்த இயக்கத்தில் என்பதால்தான் அதன் பெயரை மறக்கவில்லையோ என்னவோ.

சிறுவர் போராளியாக இயக்கத்தில் இணைந்த அவரால் இன்று பலரும் வியக்கத்தக்க வகையில் கேள்வி கேட்கமுடிகின்றது என்றால் அவர் வளர்ந்த இடம் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது என்பதை மறக்காததால்தான் அப்படியொரு பெயரை கட்சிக்கு வைத்தாரோ என்னவோ?

- ஊர்க்குருவி

# தீபாவளி நாளிலும் உரிமை கேட்டு மன்னாரில் மக்கள் கவனவீர்ப்பு!




மன்னார், ஒக். 25

தீபாவளி தினமான நேற்றும் வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 85ஆவது நாள் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, பேசாலை வசந்தபுரம் கிராமத்தில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

100 நாள் செயல்முனைவின் 85 ஆம் நாள் போராட்டத்தில் உள்ள வசந்தபுரம் கிராமத்தில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

‘வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்’ ‘ நாங்கள் நாட்டை துண்டாட வோ’ தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜன நாயக உரிமையாகும் 13ஆவது திருத்தச் சட்டமானது அரசமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கதுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்’ எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சைபடுத்தாதே,இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுவீகரிக்காதே எனப் பல கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன்வைத்தனர். (ஐ)

## பிரியமாலி வீசிய வலையில் புலனாய்வுகாரரும் சிக்கினராம்!

கொழும்பு, ஒக். 24

பலரை பண மோசடி செய்து ஏமாற்றிய குற்றத்துக்காக அண்மையில் கைதான திலினி பிரியமாலியின் கைபேசியில் புலனாய்வுத்துறையினர் உல்லாசமாக இருந்த காணொலி மற்றும் ஒளிப்படங்கள் சிக்கியுள்ளன என்று பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏராளமான பணத்தை ஏமாற்றிய பெண்ணிடம் இருந்து கிடைத்த சில காணொலிகள் மற்றும் ஒளிப்படங்களில் நாட்டின் புலனாய்வுத்துறையை சேர்ந்தோர் கூட சிக்கியுள்ளனர். ஒரு குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியுடன் பல ஹோட்டல்களில் இருந்து எடுக்கப்பட்ட சில உல்லாச காணொலிகள் மற்றும் ஒளிப்படங்கள் அந்த பெண்ணின் கைபேசியில் காணப்பட்டன.

இவற்றை பார்வையிட்ட அதிகாரிகள் பெரிய இடங்களுக்கு அனுப்பி என்ன செய்வது என்று கேட்டுள்ளனர்.

அவர்களின் இந்தக் கேள்விக்கு இதுவரை எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. அதனால் அது அப்படியே கிடப்பில் உள்ளது. அவர்களில் ஒருவர் விரைவில் இரகசிய பொலிஸில் முறையிடவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மற்றவர் தப்பி ஓடவுள்ளார் என்றும் தென்னிலங்கை புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-சி)

## டிராக்டர் தடம்புரண்டு குடும்பஸ்தர் மரணம்!

மட்டக்களப்பு, ஒக். 25

உழவு இயந்திரம் தடம்புரண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை - மணல்பிட்டி - 40 ஆம் கிராமம், வம்மியடியூற்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் வினோராஜ் வயது - 31 என்பவரே உயிரிழந்தார்.

உழவு இயந்தித்தில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது. படுகாயமடைந்தவர் உடனடியாக மகிழடித்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணை களைவவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



### அராலி மகமாரி அம்மன் ஆலய சுற்றுப்பிரகாரத்துக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 25

அராலி மத்தி மகமாரி அம்மன் ஆலய சுற்றுப்பிரகாரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அம்பாளின் அடியவர்களின் நன்கொடை பங்களிப்பு மூலம் இந்த சுற்றுப்பிரகாரம் அமைக்கப்படவுள்ளது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கந்தையா இலங்கேஸ்வரன், ஆலய நிர்வாகத்தினர், அம்பிகையின் அடியவர்கள் மற்றும் நன்கொடையாளர்கள். எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 25

கோதுமை மாவின் விலை குறைவுடன் ஒப்பிடும்போது இந்த வாரத்தில் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை வீழ்ச்சியின் பலனை எவ்வாறாவது மக்களுக்கு வழங்குவதற்கு அமைச்சு செயல்பட்டு வருவதாக சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை 200 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ள போதிலும், பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
25.10.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தலைமையற்ற அரசியல்?

ஓர் அரசியல் போக்குக்கு தலைமையே அடிப்படையானது. எங்கு தலைமை பலவீனமாக இருக்கின்றதோ அங்கு, அரசியலானது சமூகத்தை முன்னோக்கி நகர்த்தும் ஒரு கருவியாக தொழில்படாது. 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் போக்கானது, வெறுமனே, ‘பேச்சு பல்லக்கு தம்பி பொடி நடை’ என்பது போல் இருக்கின்றது. பல்வேறு விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால், பேசப்படும் விடயங்களை எவ்வாறு அடைவதென்னும் கரிசனை எவருக்குமில்லை - ஏனெனில், எதையும் அடைய வேண்டுமென்னும் நோக்கமே தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருப்பர்களுக்கு இல்லை. ஒருபுறம் வாய்ப்புகளை துல்லியமாகக் கணித்து அதனை நோக்கி தங்களின் ஆற்றலை திரட்டிக் கொள்ள முடியாமல் கூட்டமைப்பு தடுமாறிக் கொண்டிருக்கின்றது. மறுபுறமோ, எதிர்ப்பதை தவிர வேறு எதையும் செய்வதில்லை என்னும் நிலைப்பாட்டோடு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இயங்கி வருகின்றது.

இந்தப் பலவீனத்தை அவ்வப்போது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களிலிருந்தே தெளிவாக நோக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமென்று இறைவனை பிரார்த்திப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார். ஒரு காலத்தில் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபக தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவித்திருந்தார். தங்களால் முடியாமல் போகும்போது, தங்களின் இயலாமையை மறைப்பதற்காக கடவுளிடம் மன்றாடுவதும்கூட தமிழ் அரசியல் கட்சிகளின் இயல்பாகும்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்றவில்லை - அவர்கள் தமிழ் மக்களை இரண்டாம்தர பிரஜைகளாக நடத்துகின்றனர் - இந்தக் கூற்று முற்றிலும் சரியானது. இது எந்தளவுக்கு சரியானதோ அதேயளவுக்கு சரியானது. சிங்கள ஆட்சியாளர்கள் நெருக்கடியிலிருக்கும் சந்தர்ப்பங்களை கச்சிதமாக பயன்படுத்திக்கொண்டு, தமிழ் மக்களின் நலன்களை வெற்றிகொள்ளும் அரசியல் உபாயங்களை சரிவர தமிழ் தலைவர்கள் என்போர் கையாளவில்லை என்பதும் வெள்ளிடைமலையாகும். சிங்கள ஆட்சியாளர்கள் ஒடுக்குமுறையாளர்கள் - அவர்களின் ஒடுக்குமுறையிலிருந்து விடுபட வேண்டும் என்பதுதான் தமிழ்த் தேசிய அரசியல் இலக்காகும். இந்த நிலையில், சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று புலம்புவதில் என்ன பொருள் இருக்க முடியும்? இதிலென்ன அரசியல் ஆளுமையுண்டு?

சிங்கள ஆட்சியாளர்கள் இன்னும் வாய்ப்பு கிடைத்தால் ஏமாற்றுவார்கள்தான். ஏனெனில், சிங்கள மக்களை பொறுத்தவரையில் புதிய அரசியல் யாப்பு மற்றும் அடிப்படையான கட்டமைப்பு மாற்றங்கள் என்பவை முதன்மையான பிரச்னைகள் அல்ல. ஜே. வி. பி. மற்றும் முன்னிலை சோசலிச கட்சிகள் போன்றவை தாங்கள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவே சில மாற்றங்கள் தேவையென்று கூறுகின்றனர். கொழும்பில் இயங்கிவரும் சிவில் சமூகக் குழுக்களும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கும் நோக்கில் மாற்றங்கள் தொடர்பில் கோரவில்லை.

எனவே, அரசமைப்பு மாற்றம் என்பது அவர்களுக்கு முதன்மையான பிரச்னைகள் இல்லை. அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமே முதன்மையான பிரச்னையாகும். இதனைப் புரிந்து கொள்ளாமல் சிங்கள ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று குரலெழுப்புவதில் எவ்வித பயனும் இல்லை. உண்மையில், அரசியல் சூழலை சரியாகக் கணித்து கிடைக்கும் சந்தர்ப்பங்களை கையாளத் தெரியாமல் இருப்பது யாருடைய பிரச்னை? சிங்கள ஆட்சியாளர்களின் பிரச்னையா? வாய்ப்புகளை நாங்கள் பயன்படுத்தத் தவற விடுகின்றபோது சிங்கள ஆட்சியாளர்களே நன்மையடைகின்றனர். இதனைப் புரிந்துகொள்ளாமல் முன்னெடுக்கப்படும் தமிழ்த் தேசிய அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்ந்தும் சிங்கள ஆட்சியாளர்களுக்கே வாய்ப்பாக அமையும்.

# தேசிய மருத்துவமனையில் அதிகரிக்கும் திருட்டுக்கள்!

## பொலிஸார் அசமந்தம்

*கொழும்பு, ஒக். 25*

*கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் பணப்பைகள், கைபேசிகள், தங்க ஆபரணங்கள் என்பன திருடப்படுகின்றமையால் அங்கு பாதுகாப்பற்ற நிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.*

*மருத்துவமனையை சுற்றி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் நோயாளர்களின் உடைமைகளை திருடுகின்றனர் என்றும், சிலர் வைத்தியசாலையில் தாதியர் வேடமிட்டு வந்து திருடுகின்றனர் எனவும் மருத்துவமனையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*நாளாந்தம் திருட்டு சம்பவங்கள் இடம்பெறுவதால் மருத்துவமனையில் தற்போதுள்ள பொலிஸ் பிரிவுக்கு பதிலாக பொலிஸ் பிரிவை அமைக்குமாறு மருத்துவமனை அதிகாரிகள் பொலிஸ் மா அதிபர்களிடம் கோரிக்கை விடுத்தபோதும், அது நிறைவேற்றப்படவில்லை என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.*

*இதேவேளை, திருட்டுச் சம்பவங்களுக்கு வைத்திய சாலையின் சில இளநிலை ஊழியர்களும் துணைபோவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், இந்த சம்பவங்கள் தொடர்பில் மருதானை பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்தும் இதுவரை போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், திருட்டில் ஈடு பட்ட பலரை வைத்திய சாலை ஊழியர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத் துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ)*

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இரட்டை குடியுரிமை உடையோர்!

## சபாநாயகர் மகிந்த யாப்பா

*கொழும்பு, ஒக். 25*

*சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.*

*தனக்கு தெரிந்த வகையில் இரண்டு மூன்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள். இவர்களைத் தவிர வேறு எவரும் இவ்வாறு பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றார்களா என்பது எனக்கு தெரியாது - என்றும் அவர் கூறினார்.*

*இந்நிலையில், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சபாநாயகர் கூறியுள்ளார். (ஐ)*

# ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தில் நரகாசுர சங்ஹார நிகழ்வு

*கிளிநொச்சி, ஒக். 25*

*வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலயத்தில் நரகா சுர சங்ஹாரம் இடம்பெற்றது.*


*கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாகவிருந்து மயிலாட்டம், உயிலாட்டம், பொம்மலாட்டத்துடன் சூரன் வலம் வந்தார்.*

*பிள்ளையார் கோவில் முன்பாக சூரன் வந்தடைந்ததும், கிருஷ்ணரும் வந்தார். இதன் போது போருக்கு தயாரான நிகழ்வு பிள்ளையார் ஆலயம் முன்பாக இடம்பெற்றது.*

*தொடர்ந்து, கிளிநொச்சி நகர் ஊடாக வலம் வந்து பின்னர் கிருஷ்ணர் ஆலயம் சென்று அங்கு சூரசங்ஹார நிகழ்வு இடம் பெற்றது. (ஐ)*



# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தினருடன் கோயிலுக்கு சென்று வருவீர்கள். உறவினருடன் ஏற்பட்ட சங்கடம் தீரும்.

**இடபம்**
உறவினர்கள் ஆதரிப்பர்.உறவினர் ஆதரவுடன் விருப்பம் பூர்த்தியாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். சொத்து பிரச்னை தீரும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் பிரச்னைகளை சரிசெய்வீர்கள். உறவினரால் நன்மை உண்டு.

**கடகம்**
உறவினரால் உதவி உண்டாகும். குடும்பத்தினர் ஆதரவுடன் உங்களின் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு உங்கள் முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். பொருளாதார நிலை உயரும். மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் விலகும். வர வேண்டிய பணம் வசூலாகும்.நீங்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**கன்னி**
சிந்திக்காமல் எந்த செயலிலும் ஈடுபட வேண்டாம். நெருக்கடியான நாள். மற்றவரை நம்பி உங்கள் செயல்களை ஒப்படைக்க வேண்டாம். நெருக்கடி வரலாம். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**துலாம்**
திட்டமிட்ட செயல்கள் இன்று இழுபறியாகும். பயணத்தில் கவனம் தேவை.மற்றவரிடம் விவாதம் வேண்டாம். நண்பர்களால் பிரச்னைகள் உண்டாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**விருச்சிகம்**
ஆதாயம் அதிகரிக்கும். எளிதாக நிறைவேறும் என்று எதிர்பார்த்த முயற்சி ஒன்று இழுபறியாகும்.பிரச்னைகளை சமாளித்து எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். வருமானம் கூடும்.

**தனுசு**
கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். செல்வாக்கு கூடும். முடிக்க முடியாத ஒரு வேலையை இன்று முடிப்பீர்கள்.

**மகரம்**
எதிர்பார்த்த வருமானம் வரும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்தவற்றில் அனுகூலம் ஏற்படும்.உங்கள் அணுகுமுறையால் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். வருமானம் உயரும்.

**கும்பம்**
வார்த்தை, செயலில் நிதானம் தேவை. சந்திராஷ்டமம் என்பதால் சங்கடம் தொடரும். சிறிய வார்த்தை கூட பிரச்னைக்கு காரணமாகலாம். வீண் விவாதம் வேண்டாம் உங்கள் செல்வாக்கிற்கு பாதகம் ஏற்படலாம்.

**மீனம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதியர் ஒற்றுமை சிறக்கும். நன்மையான நாள். செயலில் விவேகம் இருக்கும். உங்கள் திறமை வெளிப்படும் நாள். உறவினர்களின் பாராட்டைப் பெறுவீர்கள்.

# தமிழை காக்க பா.ஜ.க. போராட்டம்; மக்களை திசை திருப்பும் நாடகம்!

## வைகோ தெரிவிப்பு

சென்னை, ஒக். 25

தமிழை காக்க வரும் 27ஆம் திகதி பாரதிய ஜனதா கட்சி சார்பில் நடைபெறவுள்ள போராட்டம், மக்களின் கவனத்தை திசைத் திருப்புவதற்கான நாடகம் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக (ம. தி. மு. க.) பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

மருது சகோதரர்களின் 221 ஆவது நினைவு தின நிகழ்வில் பங்கேற்ற அவரிடம், எதிர் வரும் 27ஆம் திகதி பா. ஜ. க. சார்பில் நடைபெறவுள்ள தமிழை காக்கும் போராட்டம் குறித்து கேள்வி எழுப்பப்பபட்டது.

இதற்கு பதிலளித்த அவர், "தமிழை காக்க பல தமிழறிஞர்கள் 1938இல் இருந்து போராடி வந்து, 38இல் ஹிந்தி விரட்டப்பட்டு மீண்டும் 1948இல் கொண்டுவரப்பட்டது. அப்போதும் விரட்டப்பட்டு, 1965இல் ஹிந்தி மீண்டும் மகுடம் சூடும் என்றபோது, மொத்த தமிழ்நாடும் போர்க் களமானது. ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தில் இலட்சக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டார்கள். 8 பேர் தீக்குளித்து மடிந்தார்கள்.

இவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்து ஹிந்தியை விரட்டிய இந்த தமிழ்நாட்டு மண்ணில் காலூன்றிவிடலாம் என்ற மனப் பால் குடித்தவாறு பா. ஜ. கவினர் ஹிந்திக்கு ஆதரவாக பேசுகிறோம் என்று சொல்வது வெட்கக்கேடானது - அவமானகரமானது. தமிழர்கள் இதை பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். தமிழர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஹிந்தியை எதிர்த்து போராடிய களங்கள் ஒருபோதும் வீண்போகாது. மீண்டும் அந்த களங்கள் வரும். மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக பா. ஜ. க. இந்த நாடகத்தை நடத்துகிறது" என்றார். (ஐ)

# மக்களின் அச்சத்தை அரசு போக்கவேண்டும்!

## தமிழக பா.ஜ.க. வலியுறுத்து



சென்னை, ஒக். 25

கோவை கார் வெடி விபத்தில் உள்ள மர்மத்தை வெளிப்படுத்தி, மக்களிடம் அச்சத்தை போக்கும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும்கூறியிருப்பதாவது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, மக்கள் அதிகம் புழங்கும் கோவை உக்கடம் பகுதியில் நடந்த கார் வெடி விபத்து, மிகுந்த அதிர்ச்சியையும், பல்வேறு சந்தேகங்களையும் எழுப்புகிறது.

பண்டிகை காலத்தில் கோவை மக்களிடம் ஏற்பட்டுள்ள அச்சத்தை போக்க, தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். டி. ஜி. பி. மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு உடனடியாக சென்று, விசாரணை தொடங்கியுள்ளதை தமிழக பா. ஜ. க. வரவேற்கிறது.

தமிழகத்தை மீண்டும் கலவர பூமியாக மாற்றத் துடிக்கும் சமூக விரோதிகளிடம் இருந்து, மக்களைக் காக்கும் பொறுப்பு காவல் துறையிடம் உள்ளது. எனவே, இந்த வெடி விபத்தின் மர்மம் விலக, போதிய நடவடிக்கைகளை காவல்துறை உடனடியாக எடுக்கும் என்று நம்புகிறோம் - என்றார். (ஐ)

# சாதனை அல்ல அவமானமே!

சென்னை, ஒக். 25

"ஒரேநாளில் 259 கோடி (இந்திய) ரூபாய்க்கு மது விற்பனை சாதனையல்ல... வேதனை, அவமானம்" என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பா. ம. க.) நிறுவுநர் ராமதாஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட பதிவில், "தமிழகத்தில் தீப ஒளி திருநாளுக்கு முந்தைய நாளான நேற்று (நேற்றுமுன்தினம்) ஒரே நாளில் ரூ. 259 கோடிக்கு மது விற்பனையாகியிருக்கிறது. தீப ஒளி நாளான இன்று (நேற்று) ரூ.300 கோடிக்கும் கூடுதலாக மது விற்பனை செய்யப்படக்கூடும் என்று கூறப்பட்டது.

கடந்த ஆண்டு தீபஒளி திருநாளுக்கு முதல் நாளில் ரூ.205 கோடிக்கும், தீப ஒளி நாளில் ரூ.225 கோடிக்கும் மது விற்பனையான நிலையில், அதை விட இந்த ஆண்டு அதிகமாக மது விற்பனையாகியிருக்கிறது. மது விற்பனை அதிகரித்திருப்பது எந்த வகையிலும் சாதனையல்ல... அவமானம்.

தீப ஒளி, பொங்கல் போன்ற திருவிழாக்கள் மகிழ்ச்சியாக கொண்டாடப்பட வேண்டுமானால் அந்த காலத்தில் மதுக்கடைகள் மூடப்பட்டிருக்க வேண்டும். அடுத்தகட்டமாக தமிழ்நாடு முழுவதும் மதுக்கடைகளை நிரந்தரமாக மூடி மது விலக்கை நடைமுறைப் படுத்த வேண்டும்" - என்றார். (ஐ)

# ஆறுமுகசாமி அறிக்கை உண்மைக்கு புறம்பானது

## முன்னாள் அமைச்சர் சொல்கிறார்

"ஆறுமுகசாமி ஆணையத்தில் என்னைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை, ஒருதலை பட்சமானது. இது அரசியல் உள்நோக்கம் கொண்ட கருத்துகள் என்பதை நான் ஆணித்தரமாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்" என்று அ. தி. மு. கவின் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், "மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எங்களுக்கு தெய்வம் - எங்களுடைய கடவுள். ஆகையால், ஆறுமுகசாமி ஆணையத்தில் என்னைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகள், முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை. ஒருதலைபட்சமானது.

இது அரசியல் உள்நோக்கம் கொண்ட கருத்துகள் என்பதை நான் ஆணித்தரமாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்த வரை ஜெயலலிதாவை இழந்து இருக்கக்கூடிய - தவிக்கக்கூடிய இந்த நேரத் தில் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியது போன்றதாக ஆணையத்தின் கருத்துகள் இருக்கின்றன. இருந்தாலும், பொது வாழ்க்கை யில் இருக்கக்கூடிய நாங்கள் இதை சட்ட வல்லுநர்களோடு கலந்து சட்டப்படி நேர்மையோடு முறையாக நெஞ்சுரத்தோடும் நெஞ்சத்தில் தூய்மையோடும் இதை நான் சட்டப்படி எதிர்கொள்வேன்" என்றார்.

முன்னதாக, நடந்துமுடிந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில், ஆறுமுகசாமி ஆணையத்தின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதில், வி. கே. சசிகலா, சிவக்குமார், முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், அப்போதைய சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் குற்றம் செய்தவர்களாக முடிவு செய்து, அவர்கள் 4 பேரையும் விசாரணைக்கு உட்படுத்த உத்தர விட வேண்டும் என்று பரிந்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்கக் குடியுரிமையை துறக்கும் பஸில் ராஜபக்ஷ?

## விரைவில் நாட்டுக்கு திரும்புவார்

கொழும்பு,ஒக்.25

**பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தனது அமெரிக்க இரட்டைக் குடியுரிமையை கைவிடத் தீர்மானித்துள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.**



அதன்படி, தற்போது அது தொடர்பான ஆவணங்களை பஸில் ராஜபக்ஷ தயாரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

அந்த ஆவணங்களை அமெரிக்க அதிகாரிகளிடம் கையளித்ததன் பின்னர் பஸில் ராஜபக்ஷ இலங்கை வரத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது முழு நேரத்தையும் அரசியலுக்காக அர்ப்பணிக்கவும், வந்தவுடன் மொட்டு கட்சியை மறுசீரமைக்கவும் அவர் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பஸில் ராஜபக்ஷவை குறிவைத்து 22ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதாகவும் அவரது அரசியலை முடிவுக்கு கொண்டு வரவே இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டதாகவும் பலர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராவதற்கோ எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லை என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே இரட்டைக்குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடாது என்ற 22ஆவது திருத்தச்சட்டத்தினால் எந்த பிரச்னையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அஹுங்கல்ல துப்பாக்கிச்சூடு; ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக். 25

ஒக்ரோபர் 12 ஆம் திகதி அஹுங்கல்ல பிரதேசத்தில் நபர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் குழுவினால் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நேற்று முன்தினம் ரம்புக்கனை, வாகொல்லவத்தை, பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அங்கு கடந்த ஒக்ரோபர் 12 ஆம் திகதி அஹுங்கல்ல பிரதேசத்தில் நபர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்த சந்தேகநபர்கள் வந்த காரை ஓட்டி சென்ற நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக அஹுங்கல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபர் 41 வயதான ரம்புக்கனை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கசினோ வரி அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 25

கெசினோவிற்கான வருடாந்த வரி 20 கோடி ரூபாயில் இருந்து 50 கோடி ரூபாயாக 150 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய விடுத்துள்ள அறிவித்தலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, ஒகஸ்ட் 1 ஆம் திகதி முதல் கெசினோவிற்கான வருடாந்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கைக்கு கிடைக்கவுள்ள நிலக்கரி

கொழும்பு, ஒக். 25

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி ஆலைக்கு நிலக்கரியை இறக்குமதி செய்வதற்காக கடந்த ஜூன் மாதம் பதிவு செய்யப்படாத ஒருவர் சமர்ப்பித்த ஏலம் ஏற்கப்பட்டதாக கணக்காய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

2022 முதல் 2025 வரையிலான காலப் பகுதியில் நிலக்கரி கொள்முதல் செய்வதற்கான கொள்முதல் செயல்முறை மதிப்பீடு தொடர்பான சிறப்பு தணிக்கை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத வர்த்தகர் சமர்ப்பித்த நிலக்கரி விநியோகம் தொடர்பான ஏலம் தகுதியற்ற ஏலமாக கருதப்பட்டிருக்கலாம் என்று அறிக்கை கூறுகிறது.

கடந்த ஒகஸ்ட் 2 ஆம் திகதி, இலங்கை நிலக்கரி நிறுவனம் இந்த பதிவு செய்யப்படாத நிலக்கரி வழங்குனருடன் வணிகம் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சட்டமா அதிபரிடம் வினவியதுடன், சட்டமா அதிபரின் கருத்தைப் பெறுவதற்கு முன்பே ஏலம் வழங்கப்பட்டதாக கணக்காய்வு அறிக்கை கூறுகிறது. (அ)

## பகிடிவதை ஒருவித மனநோய்!

### கூறுகிறார் அமைச்சர் நிமல்

கொழும்பு, ஒக். 25



எதிர்காலத்தில் பகிடிவதைக்கு எதிராக கடுமையான தீர்மானங்களை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அது ஒருவித மனநோய் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்கள் மீதான அடக்குமுறை துன்புறுத்தலுக்கு எதிராக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மனக் குழப்பத்தின் காரணமாக அறிக்கைகளை வெளியிட்டமை சாதகமான நிலைமை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

பகிடிவதை என்பது ஒருவித மனநோய் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். (அ)

## அராலியில் வீதி விளக்குகள் பொருத்தல்



யாழ்ப்பாணம், ஒக். 25

அராலி 13ஆம் வட்டாரத்திற்குட்பட்ட அராலி மேற்கு மற்றும் அராலி மத்தி பகுதிகளில் மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளன.

வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் சுந்தையா இலங்கேஸ்வரனின் மேற்பார்வையின் கீழ் குறித்த பகுதிகளுக்கு 30 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டுபாய்க்கு தொழில் தேடி சென்று தவிக்கும் இலங்கைப் பெண்கள்!

கொழும்பு, ஒக். 25

டுபாய்க்கு வேலைக்காகச் சென்ற 80 இலங்கைப் பெண்கள் அங்கு சிக்கித் தவிப்பதாக அந்நாட்டுத் தூதரகம் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பணியகத்துக்குத் தெரிவித்துள்ளது.

இவர்கள் பல்வேறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக டுபாய்க்கு வேலைக்காகச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐம்பது பெண்கள் டுபாயில் உள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகத்தில் சிக்கித் தவிக்கின்றனர். மீதமுள்ளவர்கள் ஒரு வீட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று டுபாயில் உள்ள இலங்கை கொன்சியூலர் ஜெனரல் நலிந்த விஜேரத்ன தெரிவித்தார்.

டுபாய்க்கு பணி நிமித்தம் சென்றவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா விசாவில் வந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு டுபாயில் உள்ள இலங்கை கொன்சியூலர் அலுவலகத்துடன் இணைந்து செயற்படும் என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். (அ)

## நட்புறவான வெளிவிவகாரக் கொள்கை இல்லாமையே நெருக்கடிக்கு காரணம்!

### மைத்திரிபால சிறிசேன குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 25

தனது ஆட்சிக் காலத்தில் இருந்தது போன்று தற்போது நாட்டில் நட்புறவான வெளிவிவகாரக் கொள்கை இல்லாமையினாலேயே தற்போதைய நெருக்கடி நிலையை மோசமாக்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்கள் மத்தியிலும் அரசாங்கத்திலும் மிகவும் கேள்விக்குரிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலன்னறுவை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார். (அ)

## எரிவாயு விலை மேலும் குறையும்

கொழும்பு, ஒக். 25

உலக சந்தையில் நிலவும் விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, உள்நாட்டு எரிவாயு விலை அடுத்த மாதம் மேலும் குறையலாம் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனம் உலக வங்கியிடமிருந்து பெற்ற கடனை டிசெம்பர் மாதம் செலுத்த முடியும் என அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

செப்ரெம்பரில் 6.5 பில்லியன் செலுத்தியதாகவும் ஒக்ரோபரில் 7.5 பில்லியன் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மீதமுள்ள கடனை டிசெம்பர் மாதத்திற்குள் செலுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# கஞ்சாவை சட்டபூர்வமாக்குவது நாட்டின் கலாசாரத்துக்கு முரண்!

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 25

**கஞ்சாவை சட்டபூர்வமாக்கும் அதிகாரிகளின் நடவடிக்கையை எதிர்ப்பதாக ஐக்கிய மக்கள்சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

மருத்துவ நோக்கங்களுக்காக கஞ்சாவை வளர்ப்பதற்கான சட்டத்தை உருவாக்கவுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி அறிவித்துள்ளார்.

கஞ்சா ஆயுர்வேத சட்டத்தின் கீழ் வருவதால், பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் கூறினார்.

எவ்வாறாயினும் நிதி நலன்களின் அடிப்படையில் மாத்திரம் அதிகாரிகள் தீர்மானங்களை எடுக்க முடியாது என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

இது அந்நியச் செலாவணியை கொண்டுவரும் என்றாலும், இலங்கையின் கலாசாரத்திற்கு எதிரானது என்பதால், இந்த பிரேரணைக்கு உடன்பட முடியாது என அவர் குறிப்பிட்டார். (அ)



# யாழில் கொட்டி தீர்த்த மழை

யாழ்ப்பாணம், ஒக். 25

இந்துக்கள் கொண்டாடும் முக்கியம்வாய்ந்த பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி திருநாள் நேற்று உலகம் முழுவது உள்ள இந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

தீபாவளி கொண்டாட்டத்தின்போது புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதும், உறவினர்கள் வீடுகளுக்கும் சென்று விருந்துபசாரங்களில் ஈடுபடுவதும் பண்டைய காலம் தொட்டு வந்த மரபு.

நேற்று யாழ்ப்பாணத்தில் பலத்த மழை பெய்தது. அதன் காரணமாக மக்களது தீபாவளிக் கொண்டாட்டம் சோபையிழந்து காணப்பட்டது. (அ)

# பெரஹறாவில் தீப்பந்தங்களை சுழற்றிய மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 25

தொடங்கொட விகாரை ஒன்றில் இடம்பெற்ற பெரஹறா ஊர்வலத்தின்போது தீப்பந்தங்களை சுழற்றிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதுடன் மேலும் இரு இளைஞர்கள் காயமடைந்தனர் என தொடங் கொட பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கொட ஹர்மன்வத்தை பிரதேசத்தில் வசிக்கும் மிரிஸ்வத்தை தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் 17 வயதான கிஹான் கவிந்து விக்ரமரத்ன என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடின பிங்கம பெரஹறாவில் உயிரிழந்த குறித்த மாணவன் மற்றும் சிலர் தீப்பந்தங்களை சுழற்றிக்கொண்டிருந்த போது, கோவிலில் இருந்து நாணல் புதர் வரை தற்காலிகமாக நீட்டப்பட்டிருந்த மின்சார வயர் தீப்பந்தங்களை சுழற்றிய இரும்பு வளையத்தில் முட்டியதில் குறித்த இளைஞன் மின்சாரம் தாக்கி கீழே விழுந்துள்ளார். அதை எடுக்க முன்வந்தபோது மற்றவருக்கும் காயம் ஏற்பட்டது என பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

தொடங்கொடை பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த 1990 சுவசரிய நோயாளர் காவு வண்டியின் சுகாதாரப் பணியாளர்கள் மின்சாரம் தாக்கிய மாணவனுக்கு செயற்கை சுவாசம் வழங்கி களுத்துறை பொது வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும், அதற்குள் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# போதைப்பொருள் பாவனை குறித்து உயர்மட்ட நடவடிக்கைகள் அவசியம்

## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.25

போதைப்பொருள் பாவனையை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிற நிலையில், அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப் பொருள் பாவனை தற்போது தலைவிரித்தாடுகின்றது. இதன் காரணமாக 10 இளைஞர்களுக்கு மேல் உயிரிழந்துள்ளனர். 140 பேர் வரையிலானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த காலத்தில் வன்முறை ஒழிப்போம் போதைபொருளை தடுப்போம் எனும் தொனிப்பொருளில் நாம் ஒரு வேலை திட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

கொரோனாப் பெருந்தொற்று காரணமாக அதனை தொடர்ச்சியாக செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனாலும் தற்போது போதைப்பொருள் பாவனை என்பது தலைக்கு மேலே சென்றுவிட்டது. இதன் காரணமாக மீண்டும் அந்த வேலை திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதுடன் மூன்று விதமாக மேற்கொள்ளவுள்ளோம்.

முதலாவது - இளையவர்களுக்கு புத்திமதி வழங்கும் ஒரு விழிப்புணர்வு நிகழ்வைப் பாடசாலை மட்டத்தில் நடத்தல், இரண்டாவது - போதைப்பொருள் பாவனையில் சிக்கி உள்ளவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது தொடர்பான விடயங்களை மேற்கொள்ளல், மூன்றாவது - போதைப்பொருள் பாவனையை தடுக்க வேண்டும். இதனை சட்டரீதியாக தடுக்கவேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

# 9 மாவட்டங்களில் டெங்கு அபாயம்!

கொழும்பு, ஒக். 25

நாட்டின் 09 மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, புத்தளம், பதுளை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது வெகுவான அதிகரிப்பாகும் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடத்தில் 25,067 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர்.

நிலவும் மழையுடனான வானிலையுடன் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவக்கூடும் என்பதால், நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருக்கவேண்டாம் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான இளைஞர் திடீரென உயிரை மாய்த்தார்!

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மருதடி - புத்தூர் மேற்கை சேர்ந்த இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களாக போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் இதனைத் தடுப்பதற்கு துறை சார்ந்தவர்கள் நடவடிக்கை எடுத்து வரினும் இன்று வரை போதைப்பொருளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இளைஞர் ஒருவர், தவறான முடிவெடுத்த உயிரை மாய்த்துள்ளார்.

யாழ். மருதடி - புத்தூர் மேற்கை சேர்ந்த இளைஞரே இவ்வாறு விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

கல்வியில் திறமையாக திகழ்ந்த குறித்த இளைஞன், உயர்தரத்திற்கு தெரிவான பின்னர் யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள பாடசாலையில் இணைந்துள்ளார்.

அங்கு அவர் ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சான்று பெற்ற சிறுவர் பாடசாலையிலும் இளைஞன் சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் கடந்த ஒரு மாத காலமாக ஹெரோய்னை நுகர முடியாமல் இருந்துள்ளார். இந்நிலையில், நேற்றுமுன்தினம் உயிரை மாய்த்துள்ளார். (அ)

# அரசுடன் இணைய நினைத்தால் அதுவே அவர்களின் அரசியல் பயணத்தின் முடிவு

## தனது உறுப்பினர்களை எச்சரிக்கிறார் சஜித்

கொழும்பு, ஒக்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து எவரேனும் விலகி அரசாங்கத்தில் இணைந்து கொள்ள நினைத்தால் அது அவரது அரசியல் பயணத்தின் முடிவாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு எதிர்வரும் தேர்தலில் பதிலடி கொடுக்க மக்கள் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.(அ)

# விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு முதலிட இந்தியா, இஸ்ரேல் திட்டம்

## முக்கிய பேச்சுக்கள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 25

**இந்தியாவும் இஸ்ரேலும் இலங்கையின் விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக கூட்டாக முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான இஸ்ரேலின் முகவரகத்துடன் இணைந்து இலங்கையில் விவசாயத்தில் சிறந்து விளங்கும் மையங்களை நிறுவுவதற்கு விவசாய அமைச்சு இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதுடன் விவசாய தொழில்நுட்பங்களுக்கு இஸ்ரேல் உதவியை வழங்கவுள்ளதுடன் இலங்கைக்கு நிதியுதவி வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பழங்கள், உருளைக்கிழங்கு, நெல் அல்லாத தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் பயிர்களை வளர்ப்பதற்காக ஹொரணை, சீதா-எலிய, மஹில்லுப்பல்லம, அங்குனுகொலபெலஸ்ஸ மற்றும் கன்னொருவ ஆகிய ஐந்து இடங்களை விவசாய அமைச்சு அடையாளம் கண்டுள்ளது.

தவிர, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கும் திட்டமும் உள்ளது.

தேவை சார்ந்த இலக்குகள், வீதி வரைபடம், பங்குதாரர்கள், பொறுப்புகள் மற்றும் மையங்களை நிறுவுவதற்கான காலக்கெடு ஆகியவற்றைக் கண்டறிய டில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்துடன் நேரடி உரையாடலைத் தொடங்குமாறு விவசாய அமைச்சு டில்லியில் உள்ள இலங்கை தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை தூதரகம் இஸ்ரேலிய தூதரகம், கொழும்பில் உள்ள இந்திய தூதரகம், விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம் மற்றும் இலங்கையின் வெளிவிவகாரத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் மெய்நிகர் சந்திப்பை ஏற்பாடு செய்தது.

முன்னோடி திட்டம் தொடர்பாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட மற்றும் இந்திய தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ளனர். (அ)

# மலையக ரயில் பாதையில் குப்பை மேடு சரிந்து வீழ்ந்தது

கொழும்பு, ஒக். 25

நேற்று அதிகாலை 05.00 மணியளவில் மலையக ரயில் பாதையில் ஹற்றன் ரயில் நிலையத்தை அண்டிய பகுதியில் பாரிய குப்பை மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் அந்தப் பாதையில் மூன்று மணிநேரம் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டதாக ஹட்டன் ரயில் நிலைய அதிபர் தெரிவித்தார்.

ஹற்றன் மற்றும் கொட்டகலை ரயில் நிலையங்களுக்கு இடையில் குப்பைகள் அடங்கிய மண் மேடு சரிந்து வீழ்ந்ததன் காரணமாக நானுஓயாவில் இருந்து ஹற்றன் வரை சென்றுகொண்டிருந்த சரக்கு ரயில் மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானது.

ஹற்றன் புறவழிச்சாலையில் வசிப்பவர்கள் ரயில் பாதைக்கு அருகில் குப்பைகளை கொட்டியதன் காரணமாக ஹற்றன் நகரில் பெய்த கடும் மழைடை அடுத்து குப்பை மேடு சரிந்து ரயில் பாதையில் விழுந்துள்ளதாக ரயில் நிலைய அதிபர் தெரிவித்தார். (அ)

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, ஒக்.25

மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை இன்று பிற்பகல் 3 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக காலி மாவட்டத்தின் அக்மீமன, பத்தேகம, களுத்துறை மாவட்டத்தின் பாலிந்த நுவர, வலல்லாவிட்ட, தொடங்கொட, இங்கிரிய மற்றும் புலத்சிங்கள மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ ஆகிய பகுதிகளுக்கு 02 ஆம் கட்டத்தின் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால், தொடர்ந்து மழை பெய்யுமாயின், மண்சரிவு, பாறைகள் சரிவு, மண்மேடு சரிவு குறித்து அவதானமாக இருக்குமாறும், தேவைப்பட்டால் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல தயாராகுமாறும் இந்த பிரதேச மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, காலி மாவட்டத்தில் யக்கலமுல்ல, நாகொட, களுத்துறை மாவட்டத்தில் மத்துகம, மில்லனிய, அகலவத்தை, கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல, புலத்கொஹூபிடிய, வரகாபொல, ருவன்வெல்ல, எட்டியந்தோட்டை, தெரணியகலை, இரத்தினபுரி மாவட்டத்தில் கலவான, குருவிட்ட, இரத்தினபுரி, நிவித்திகல, ஹெலியகொட, அயகம மற்றும் கிரியெல்ல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மஞ்சள் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவி, நிஹெல்யகோ, இரத்தினபுரி, நிஹெல்யகோ, நிஹெல்யகொட, கலவான, குருவிட்ட, நிவித்திகல, அஹெலியகொட, அயகம மற்றும் கிரியெல்ல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மஞ்சள் மண் சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# நவம்பரில் இலங்கை வரும் அமெரிக்க அன்பளிப்பு கப்பல்!

கொழும்பு, ஒக். 25

இலங்கைக்கு அமெரிக்காவினால் அன்பளிப்பு செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 03 ஆம் திகதி அமெரிக்காவின் சியாட்டிலில் இருந்து தாயகம் நோக்கிப் புறப்பட்ட இலங்கைக் கடற்படையின் பி 627 கடல்சார் கண்காணிப்புக் கப்பல், நேற்று முன்தினம் சிங்கப்பூரில் உள்ள சாங்கி துறைமுகத்தில் நங்கூரமிட்டது.

சிங்கப்பூருக்கான இலங்கை தூதுவர் சசிகலா பிரேமவர்தனவும் கப்பலை வரவேற்பதற்கான நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தார்.

பிலிப்பைன்ஸின் மணிலா துறைமுகத்துக்கு அழைக்கப்பட்ட பிறகு, பி 627 கப்பல் ஒக்ரோபர் 16 அன்று அங்கிருந்து தனது பயணத்தை ஆரம்பித்தது.

இதனையடுத்து சுமார் 1393 கடல் மைல்கள் (2580 கிமீ) கடந்து நேற்று முன்தினம் நிரப்புதல் மற்றும் சேவைகளுக்காக சிங்கப்பூரை சென்றடைந்தது.

இந்த நீண்ட கடல் பயணத்தின்போது, பி 627 கப்பல் இதுவரை பசுபிக் பெருங்கடல் மற்றும் தென் சீனக் கடலில் சுமார் 50 நாட்களில் சுமார் 9093 கடல் மைல்கள் (16840 கிமீ) பயணம் செய்துள்ளது.

இந்த கப்பல் எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைய உள்ளது. (அ)

# மாலைதீவில் கஞ்சா கடத்திய இலங்கையருக்கு ஆயுள் சிறை

கொழும்பு, ஒக். 25

மாலைதீவில் கஞ்சா கடத்திய குற்றத்திற்காக இலங்கை குடிமகன் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரணசிங்க திஸ்ஸ ஹேவா என்ற இந்த இலங்கையருக்கு குற்றவியல் நீதிமன்றம், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஆயுள் தண்டனை விதித்ததாக மாலைதீவு செய்தி இணையத்தளமான அவாஸ் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 51(அ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி கஞ்சா கடத்திய குற்றத்திற்காக ரணசிங்க குற்றவாளி என தலைமை நீதிபதி சோப்வத் ஹபீப் தீர்ப்பளித்தார்.

போதைப்பொருள் சட்டத்தின் கீழ் ரணசிங்கவுக்கு ஆயுள் தண்டனையும் இலங்கையின் மதிப்பில் 2,334,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே இரண்டு வருடங்கள், ஏழு மாதங்கள் மற்றும் 17 நாட்களை சிறையில் கழித்திருந்த நிலையில், அந்த தண்டனைக்காலம் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர் 22 ஆண்டுகள், நான்கு மாதங்கள் மற்றும் 13 நாட்கள் சிறையில் கழிக்கவேண்டியிருக்கும்.

அபராதத் தொகையை 12 மாதங்களுக்குள் மாலைத்தீவு உள்நாட்டு வருவாய் ஆணையத்திடம் செலுத்தவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# இறப்பரின் விலை வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 25

நாட்டின் தேவைக்கு அதிகமாக இறப்பரை இறக்குமதி செய்யப்படுவதால் நாட்டில் இறப்பரின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு நாட்டின் தேவைக்கு அதிகமாக 16000 மெற்றிக் தொன் இறப்பர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், 2018 ஆம் ஆண்டு தேவைக்கு அதிகமாக 13000 மெற்றிக் தொன் இறப்பர், 2019 இல் 12000 மெற்றிக் தொன், 2019 இல் 14000 மெற்றிக் தொன் மற்றும் இந்த ஆண்டு 10000 மெற்றிக் தொன் இறப்பர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில்,நாட்டின் ஏற்றுமதி தொழில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், நாட்டின் தேவைக்காக மட்டுமே ரப்பர் இறக்குமதியை ஒழுங்குபடுத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பொதுஜன பெரமுனவுடன் உறவை பலமாக்க விரும்பும் சீன ஜனாதிபதி!

கொழும்பு, ஒக். 25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் உறவுகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன கம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை வாழ்த்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கைக்கான சீனத் தூதரகம் நன்றி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் சீன மக்கள் கட்சி பொதுஜன பெரமுனவுடன் நட்பு மற்றும் பரிமாற்றங்களை மேலும் மேம்படுத்த விரும்புவதாக சீன தூதரகம் ருவீட் செய்துள்ளது.

முன்னதாக ஜி ஜின்பிங்கின் மறுதேர்தல், சீன மக்களுக்கு அவரது தலைமையின் வலிமை மற்றும் தைரியத்தை உறுதி செய்துள்ளது என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஜி ஜின்பிங் தலைமையின் கீழ் சீனா பெரும் சாதனைகளை படைத்துள்ளது. அவரது மறு பிரவேசம், சீன மக்களுக்கு வலிமை மற்றும் தைரியத்தை உறுதிப்படுத்தியுள்ளது என்று ராஜபக்ஷ ருவீட் செய்துள்ளார்.

ஷி ஜின்பிங் கடந்த ஞாயிற்றுக்கிழமை சீனாவின் தலைவராக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வகையில் மூன்றாவது முறையாக பதவியேற்றார். இதன்படி அவர், இன்னும் ஐந்தாண்டு காலத்திற்கு பதவி வகிப்பார். (அ)

# உக்ரைன் போர்:

## ரஷ்யா-ஈரான் இடையேயான உறவால் ஏற்பட்டுள்ள புதிய அபாயம்!

—————— ஜொனாதன் மார்கஸ்



ரஷ்யாவின் அதிநவீன வான் பாதுகாப்பு கருவிகள் ஈரானுக்கு அனுப்பப்பட்டபோது இது தொடர்பான சர்ச்சைகள் பல ஆண்டுகள் தலைப்பு செய்திகளாக இடம் பிடித்தன. ஆனால், இப்போது இந்த இரு நாடுகள் இடையிலான ஆயுத போக்குவரத்தானது எதிர் திசையை நோக்கி பயணிக்கிறது.

ஈரான் விநியோகித்த ட்ரோன்களை ரஷ்ய ராணுவம், உக்ரேய்னிய மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், உக்ரேய்னின் மின்சாரம் தயாரிக்கும் மற்றும் விநியோகிக்கும் கட்டமைப்பின் மீது தாக்குதல் நடத்தவும் உபயோகித்தது.

உக்ரேய்னுடனான ரஷ்யாவின் உறவு சிக்கலடைந்ததன் காரணமாக அந்த நாடு, குறிப்பிட்ட இலக்குகளை தாக்கி அதிக உயிர் சேதத்தை ஏற்படுத்தும் ஈரானின் ஆயுதங்களை நோக்கித் திரும்பியிருக்கிறது. ரஷ்யாவிடம் உள்ள ஆயு தங்களின் கையிருப்பு, நாளுக்கு நாள் குறைந்து வரு கிறது.

உக்ரேய்னில் உள்ள தரை இலக்குகளை குறிவைத்து பலமுறை ரஷ்யா கடல் வெளி தற்காப்பு, வான்வெளி தற்காப்பு ஏகவுகணைகள் உபயோகப்படுத்தின. ஆனால், இந்த ஏகவுகணைகள் தரைவழி தாக்குதலுக்கு ஏற்றதாக இல்லை.

ஈரானில் இருந்து ரஷ்யா செல்லும் விமான போக்குவரத்து கண்காணிக்கப்பட்டது. அப்போது, ஐஆர்ஜிசி என்றழைக்கப்படும் ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப் படையை சேர்ந்த பயிற்சியாளர்கள் தங்களது படைகருவிகளை எவ்வாறு இயக்குவது என்று ரஷ்ய அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க கிரைமியாவில் உள்ள படை தளத்துக்கு அனுப்பப்பட்டது தெரியவந்தது.

உக்ரேய்னால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஈரானின் ஷாஹத்-131 எனும் சுற்றிதிரியும் ராணுவ தளவாடம் (பேச்சுவழக்கில் காமிகேஸ் ட்ரோன்கள் என்றழைக்கப்படுகிறது), பெரிய வடிவிலான ஷாஹத்-136 ஆகியவற்றின் உடைந்த பாகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. சந்தேகத்துக்கு இடமின்றி அவை ஈரானை சேர்ந்தவை என்பது தெரியவந்தது. ஈரான் இது குறித்து தொடர்ந்து மறுத்து வந்த போதிலும், ரஷ்யாவின் குறிப்பிடத்தக்க ஆயுத பற்றாக் குறையை ஈரான் சரி செய்கிறது.

இது உக்ரேய்னுக்கு நல்ல செய்தி அல்ல என்பது தெளிவாக தெரிகிறது. ஈரான் வழங்கிய குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ள நிலையில், இன்னும் மோசமான சூழல் ஏற்படலாம்.

ஈரானின் ஆயுதக் கிடங்கில் அதிக வலுவுடன் கூடிய தளவாடங்கள் உள்ளன. ஈரானிய ஆயுதங்களின் அதிக அபாயம் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணைகள் விரைவில் ரஷ்யாவுக்கு அனுப்பப்படும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

பாலிஸ்டிக் ஏவுகணைகள் ட்ரோன்களை விட பெரும் ஆயுதங்களை ஏந்தி செல்லும் திறன் கொண்டவை. உக்ரேய்னிடம் பாலிஸ்டிக் ஏவுகணை எதிர்ப்பு திறன் குறைவாகவே உள்ளது.

### புதிய பதற்றம்

ரஷ்யா-ஈரான் இடையேயான இந்த ஆழமான உறவு, என்ன மாதிரியான பரந்துபட்ட சிக்கல்களை ஏற்படுத்தும்?

ஈரான் மற்றும் சர்வதேச சமூகத்துக்கு இடையேயான காலாவதியான அணு ஒப்பந்தத்தில் எதிர்காலத்தில் விளைவுகள் ஏற்படலாம். மேலும் சிரியாவில் உள்ள படைகளின் நிலையில் இஸ்ரேல் நாட்டுக்காக குறிப்பிடத்தக்க விளைவுகளுடன் கூடிய மாற்றம் ஏற்படலாம். அதன் விளைவாக ரஷ்யாவுடனான அதன் உறவிலும் மாற்றம் ஏற்படலாம்.

ரஷ்யா, ஈரான் இரண்டுக்கும் நட்பு நாடுகள் தேவை என்பது தெளிவாகிறது. இரு நாடுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

உக்ரேய்னுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக ரஷ்யா பொருளாதார தடைகளை எதிர்கொண்டிருக்கிறது. இந்த போர் ரஷ்யாவுக்கு நன்மையளிப்பதாக இல்லை. ஈரான் ஆட்சியாளர்கள் தங்களின் அணு திட்டங்கள், கடந்த கால மனித உரிமை மீறல்கள் காரணமான பொருளாதார தடைகளை எதிர் கொண்டிருக்கின்றனர். உள்நாட்டில் பெரும் அளவில் அதிருப்தியும் நிலவுகிறது.

> **உக்ரேய்னுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக ரஷ்யா பொருளாதார தடைகளை எதிர்கொண்டிருக்கிறது. இந்த போர் ரஷ்யாவுக்கு நன்மையளிப்பதாக இல்லை. ஈரான் ஆட்சியாளர்கள் தங்களின் அணு திட்டங்கள், கடந்த கால மனித உரிமை மீறல்கள் காரணமான பொருளாதார தடைகளை எதிர் கொண்டிருக்கின்றனர். உள்நாட்டில் பெரும் அளவில் அதிருப்தியும் நிலவுகிறது.**

தங்கள் பிராந்தியத்தில் ஆதிக்கத்தை உறுதி செய்யும் இலக்குகளை அடைவதுடன் மட்டுமல்லாது, அமெரிக்காவால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாகத் தாங்கள் கருதும் உலகையும் எதிர்கொள்ள வேண்டும் என்று கருதும் நாடுகளின் சிறிய குழுவில் சீனாவுடன் இந்த இரு நாடுகளும் உள்ளன.

ஈரான் உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கையால் ஏற்கனவே மேற்கு நாடுகளின் கூடுதலான பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்கிறது. இப்போது ரஷ்யாவுக்கு ஈரான் ஆயுதங்களை அனுப்பியதை பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் 2231 ஆவது தீர்மானத்துக்கு எதிரானதாக பார்க்கின்றன. இந்த தீர்மானம் 2015ஆம் ஆண்டின் அணு ஒப்பந்தத்தின் விளைவாக நிறைவேற்றப்பட்டது.

இதனால், அணுசக்தி தொடர்பான சில தடைகள் மீண்டும் அமலாக்கப்பட வழி உண்டாகும். இந்த பதற்றங்கள், 2018ஆம் ஆண்டு டிரம்ப் நிர்வாகத்தால் கைவிடப்பட்ட ஈரானின் அணு சக்தி செயல்பாடுகளை முறைப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட சர்வதேச ஒப்பந்தமான ஜேசிபிஓஏ-வுக்கு திரும்பும் முயற்சியை மேலும் பலவீனப்படுத்தும்.

ஒப்பந்தத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள், அமெரிக்காவின் இடைக்காலத் தேர்தல் நடைபெற உள்ள நவம்பர் 8ம் திகதி வரையிலாவது நிறுத்தப்பட்டிருக்கும். இதற்கிடையே, ஈரான் தொடர்ந்து முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படும்.

உக்ரேய்ன் மீது வலுவான கவனத்தை செலுத்துவதால் ஈரானின் அணுசக்தி தொடர்பான ஆவணங்கள் மேற்கு நாடுகளுக்கு தெளிவற்ற ஒன்றாக தோன்றும். உண்மையான ஒப்பந்தத்தின் முக்கியமான தரப்பான ரஷ்யா, தனது புதிய ஆயுத வியாபாரியிடம் தனக்கு ஒரு தளம் தரும்படி அவ்வளவாக அழுத்தம் தராது.

எனினும், ரஷ்யா-ஈரான் இடையேயான உறவு என்பது ஆழ்ந்த கொள்கை பிடிப்பு அடிப்படையிலானது என்பதை விடவும் சூழ்நிலைகளை சார்ந்தே அமைந்துள்ளது.

ஈரானுடனா ரஷ்யாவின் உறவு என்பது நீண்டகாலமாகவே முரண்பாடுகளை அளவீடாக கொண்டதாக உள்ளது. சிரியாவை பொறுத்தவரை இந்த இருநாடுகளும் வெவ்வேறு வகையான இலக்குகளை கொண்டிருப்பதே இதற்கு நல்ல உதாரணமாக சொல்லலாம்.

ரஷ்யாவின் ராணுவ தலையீடு ஆசாத் ஆட்சியை காப்பாற்றியிருக்கிறது. ஈரானின் மனித வளம், ஆயுதங்கள், அரசுக்கு ஆதரவான குழுக்கள் ஆகியவை அவர் நீடித்திருப்பதற்கு முக்கியமானதாகும்.

ஆனால், ரஷ்யாவை பொறுத்தவரை சிரியாவில் தொடர்ந்து இருப்பதை இன்னும் நிர்வகித்து வருகிறது. எனவே, அங்கு ஈரானின் பிராந்திய ரீதியிலான இலக்குகளை ஒரு போதும் ஊக்குவிக்காது. எனினும் இஸ்ரேல் விரும்பிய வகையில் ஈரானின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த அது செயல்படவில்லை. சிரியாவில் ஈரானின் கட்டமைப்பை மாற்றியமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களை முறியடிக்க சிறிதளவு கூட ஏதும் செய்யவில்லை.

ரஷ்யா-ஈரான் இடையேயான உறவின் புதிய செயல்பாடுகள் இதனை மாற்றுமா? ரஷ்யாவின் சில வான்வெளி பாதுகாப்பு படைகள், தரைப் படைகள் சிரியாவில் இருந்து விலக்கிக் கொள்ளப்படும். எனினும் இன்னும் ரஷ்யா, இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு எதிராக தலையிடும் வலிமையை கொண்டுள்ளது.

உக்ரேய்னுக்கான இஸ்ரேலின் உறுதியற்ற ஆதரவை பாதிக்கும் வழிகாட்டும் கவலைகளில் இதுவும் ஒன்றாகும்.



ஆனால், இதன் எதிர்காலம் என்ன? பதிலுக்கு ஈரான் உதவியை எதிர்பார்த்து மேலும் அதி நவீன ஆயுதங்களை ரஷ்யா தர தீர்மானிக்கலாம் என்று உதாரணத்துக்கு வைத்துக் கொண்டால். அப்போது என்ன நடக்கும்? இது கியவ் மீதான இஸ்ரேலின் அணுகுமுறையில் மாற்றத்தைத் தூண்டுமா?

இப்போதைக்கு இஸ்ரேலில் பொதுத்தேர்தல் வர இருக்கும் சூழலில், அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. ரஷ்யா - ஈரான் இடையேயான புதிய உறவு, உக்ரேய்ன் போருக்கும் அப்பால் உலக நாடுகளுக்கு இடையேயான உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியத்தைக் கொண்டுள்ளது.

# இலங்கை கடல் பகுதியில் மீண்டும் ஒரு சீன கப்பல் - என்ன காரணம்?

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையின் மேற்கு பகுதியில் கடந்த ஆண்டு விபத்துள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் பாகங்களை மீட்டெடுப்பதற்காக சீனாவிற்கு சொந்தமான கப்பல் ஒன்று இலங்கை கடற்பரப்பிற்குள் வருகை தந்திருக்கிறது.

இலங்கை கடற்பரப்பின் வழியாக பயணித்த எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் கடந்த ஆண்டு மே மாதம் தீக்கிரையாகி, கடலில் மூழ்கியது. இரசாயன கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த தீ விபத்தினால் இலங்கையின் கடற்பரப்பு பெரிதளவில் பாதிக்கப்பட்டது. கொழும்பு மற்றும் அதனை அண்மித்த கரையோர பகுதிகளில் இரசாயன பொருட்கள் கரையொதுங்கியதுடன், கடல் வாழ் உயிரினங்கள் பலவும் இறந்திருந்தன.

இதனால், இலங்கையின் கடல்சார் சுற்று சூழல் உள்ளிட்ட பல பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. குறித்த காலப் பகுதியில் இந்த பகுதி மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.



இதனால், கடல் தொழிலாளர்கள் மற்றும் அதனை சார்ந்த தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த கப்பலின் பாகங்களை மீட்டு, சுற்றுபுறச் சூழலை சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகளை எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் நிறுவனமும், இலங்கை சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து முன்னெடுத்து வருகின்றன.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில், கப்பலின் பாகங்களை மீட்டெடுக்கும் நடவடிக்கைக்கான அனுமதி அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கும், சீன நிறுவனம் ஒன்றிற்கும் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை சமுத்திர பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது.

இலங்கை சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர, இதனைக் குறிப்பிட்டார்.

இந்த கப்பல் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமையவா வருகைத் தருகின்றது அல்லது எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் நிறுவனத்தின் கோரிக்கைக்கு அமையவா வருகைத் தருகின்றது என சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுரவிடம் வினவினோம்.

“இந்த கப்பலை கரைக்கு கொண்டு வர வேண்டும் என இலங்கை அரசாங்கம், எக்ஸ்பிரஸ் பேர்ல் நிறுவனத்திற்கு அறிவித்தது. கப்பலின் உரிமையாளர்கள், சர்வதேச ரீதியில் விலை மனுவை கோரியிருந்தார்கள். இதன்படி, இரண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன.

ஆழ்கடலிலுள்ள பாகங்களை வெளியில் கொண்டு வருவதற்கும், கப்பலை மீட்டெடுப்பதும் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படுமாக இருந்தால், அதற்கு மேலும் பல காலம் எடுக்கும். அதனால், ஒரே நேரத்தில் இரண்டு நிறுவனங்கள் வழங்குமாறு நாம் கோரிக்கை விடுத்தோம்.

இதன்படி, அமெரிக்க நிறுவனமொன்றுக்கும், சீன நிறுவனமொன்றுக்கும் இதனை வழங்கியுள்ளனர்.”

“கடந்த ஆண்டு அமெரிக்க நிறுவனம் அதன் பணிகளை செய்து நிறைவு செய்துள்ளது. கப்பலை மீட்டெடுப்பதற்கு சீன நிறுவனத்தை, எக்ஸ்பிரஸ் பேர்ல் நிறுவனம் தெரிவு செய்தது. கப்பலை மேலே எடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் கடந்த ஆண்டு இறுதி முதல் இந்த ஆண்டு பிப்ரவரி வரை முன்னெடுக்கப்பட்டது.

கப்பலின் கீழ் பாகத்தில் இரும்பிலான சங்கிலிகளை வைத்து, கப்பலை மேலே இழுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன,” என இலங்கை சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர தெரிவிக்கின்றார்.



இந்த நடவடிக்கைகளுக்கு ஏன் சீன நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது? என்று கேட்டபோது,

விலை மனுக் கோரலில் கப்பல் நிறுவனத்திற்கு திருப்தியளிக்ககூடிய வகையில், கப்பலை மீட்டெடுப்பதற்கான தொழில்நுட்பத்தை கொண்ட நிறுவனமாக சீன நிறுவனம் காணப்பட்டமையினாலேயே, அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது என அவர் கூறுகின்றார்.



சீன நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பில் தான் குறித்த கப்பல் நிறுவனத்திடம் கேள்வி எழுப்பிய போது, எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் நிறுவனம் இந்த பதிலை வழங்கியதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

கப்பல் தொடர்பிலான நிபுணர்களின் ஆலோசனைகளின் பிரகாரமே, சீன நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலை மீட்டெடுப்பதற்காக சீன நிறுவனம் தெரிவு செய்யப்பட்டமைக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என அவர் மேலும் கூறுகின்றார்.

இந்த நிறுவனத்திற்கான அனைத்து கொடுப்பனவுகளையும், எக்ஸ்பிரஸ் பேர்ல் நிறுவனமே செலுத்தி வருவதாகவும் இலங்கை சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர குறிப்பிடுகின்றார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலினால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு, அந்த நிறுவனம் நட்டஈட்டை வழங்கியுள்ளதா? என்று கேட்ட போது,

“சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு நிறுவனம் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது. கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கிய நட்டத்திற்கும் கொடுப்பனவை வழங்கியது. மொத்தமாக சுமார் 9 மில்லியன் அமெரிக்க டாலர் வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த நட்டஈட்டை பெற்றுக் கொள்வதற்காக அறிக்கையை நாம் தயாரித்துள்ளோம்.

அந்த அறிக்கையை சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளோம். அதற்கு அவர்கள் சட்ட நடவடிக்கைகளை பெரும்பாலும் எடுப்பார்கள். அதற்கான நட்டஈட்டை இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. சுற்று சூழலுக்கு ஏற்பட்ட நட்டத்தை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. அது பெரும்பாலும் பாரியதொரு தொகையாக அமையும். சட்ட நடவடிக்கைகளின் ஊடாகவே நாம் முன்னோக்கி செல்கின்றோம்,” என இலங்கை சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர கூறுகின்றார்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தான்

**06)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ....................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ..........................................................................

ii) old / How / you? /are : ....................................................................... (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** [7] [8] [3] [0] இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

### கல்வி tv CHANNEL-1

**25.10.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**25.10.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# உள்ளூராட்சித் தேர்தலை அரசு பிற்போடக்கூடாது!

## கோருகின்றது கூட்டமைப்பு

கொழும்பு, ஒக்.

**22ஆவது திருத்த சட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு பாதகமும் இல்லாத சாதகமும் இல்லாத நிலை காணப்பட்டதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

09 மாணங்களுக்குமான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை யெடுக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் பிற்போடக்கூடாது என்று எதிர்க்கட்சி கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அந்த விடயத்தில் தாங்களும் உறுதியாக வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு தொடக்கம் ஆளும் கட்சியில் உள்ள ஒரு மக்கள் பிரதிநிதி, ஒரு கட்சியின் தலைவர், கிழக்கு மாகாணத்தை மீட்கப்போகின்றேன் என்று கூறிய கட்சியின் தலைவர் காணிக் கொள்ளை நடைபெற்றிருந்தால் அதனை வெளிப்படையாக வெளிப்படுத்தி யிருக்கவேண்டும்.

அதற்கு மேலாக கடந்த இரண்டு வருடமாக மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவராயிருக்கின்றார். அவர் மாவட்ட செயலகத்தில் தகவலைப்பெற்று மாவட்ட மக்களுக்கு வெளிப்படுத்தி யிருக்கலாம்.

அத்துடன் அது தொடர்பு பட்ட அமைச்சரை தொடர்பு கொண்டு அந்தக் காணிகளை மீட்டு வறிய மக்களுக்கு பிரித்துக்கொடுப்பதே உண்மையான மக்கள் பிரதிநிதியின் கடமையாகும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)



# 53 கஞ்சா செடிகளை வீட்டு தோட்டத்தில் வைத்திருந்தவர் தீபாவளி தினத்தில் கைது

அம்பாறை, ஒக். 25

வீடு ஒன்றின் தோட்டத்தில் சூட்சுமமான முறையில் 53 கஞ்சா செடிகளை வளர்த்து வந்த சந்தேக நபரை சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அன்னமலை பகுதியில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டு வருவதாக இரகசிய தகவல் ஒன்றை அடுத்து பொலிஸார் நேற்று திங்கட்கிழமை தீபாவளி தினத்தன்று தேடுதல் மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர் அன்னமலை பகுதியை சேர்ந்த 58 வயதான சந்தேக நபர். வீட்டின் தோட்டத்தில் உள்ள பயிர்களுடன் இணைத்து குறித்த 53 கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சான்று பொருட்கள் யாவும் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (அ)



# கபிலவத்தை கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம்!

அம்பாறை, ஒக். 25

தீபாவளியை முன்னிட்டு சித்தர்கள் குரல் அமைப்பினர் மொனராகலையை அடுத்துள்ள அடர்ந்த கபிலவனத்தை ஊடறுத்து செல்கின்ற கபிலவத்தை கங்கையில், மரகதலிங்கத்திற்கு சிறப்பான அபிஷேகத்தை மேற்கொண்டனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் ஒருமணி நேரம் பால், பழம், தயிர், விபூதி, சந்தனம் ,குங்குமம் போன்ற திரவியங்களால் அபிஷேக வழிபாட்டில் ஈடுபட்டனர்.

"ஆதி கதிர்காமம் "என அழைக்கப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற கபிலவத்தையில், ஷப்தகன்னியர்கள் உறைந்த கபிலவத்தை கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் நடைபெற்றது.

"ஹரஹரமகாதேவா சம்போமஹாதேவா" என்ற சுலோகம் விண்ணைத்தொடும் வண்ணம் பக்தர்கள் உரத்து ஒலி எழுப்பியபோது ,எங்கிருந்தோ பறந்து வந்த மயில் அபிஷேகம் இடம் பெற்ற சூழலில் வந்து நடந்து நடந்து ஆசீர்வதித்த வண்ணம் உலா விக்கொண்டிருந்தது.அனைவரும் ஆச்சரியத்துடன் பிரமித்துப் போனார்கள். (அ)

# கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை தேசியத்தில் தங்கம் வென்று சாதனை

அம்பாறை, ஒக். 25

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக 'தைக்கொண்டோ' சுற்றுப் போட்டியில் பங்குபற்றி, 5 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட 'தைக்கொண்டோ' சுற்றுப் போட்டி கடந்த 21,22,23 ஆகிய தினங்களில் கேகாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள், 1 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தமாக தேசிய ரீதியில் 5 பதக்கங்களைப் பெற்று மாகாணத்திற்கும், வலயத்திற்கும், கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இதில் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான 80 - 87 கிலோ எடைப் பிரிவில் ஜே.ஏ. சுமைட் தங்கப் பதக்கமும் 74 - 80 கிலோ எடைப் பிரிவில் என்.எம்.நுஸ்ரி வெள்ளிப் பதக்கமும் 63-68 கிலோ எடைப் பிரிவில் ஏ.எல்.எம்.அப்ரி வெண்கலப் பதக்கத்தையும் + 87 கிலோ எடைப் பிரிவில் ஏ.எம்.நாஸிக் அன்சாப் வெண்கல பதக்கத்தையும், 18 வயதுக் குட்பட்ட மாணவர்களுக்கான +74 கிலோ எடைப் பிரிவில் ஜே.ஏ.சுரைப் வெள்ளிப் பதக்கமும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (அ)



# ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தவர் கல்முனை விசேட அதிரடிப்படையால் கைது

அம்பாறை, ஒக். 25

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து ஞாயிற்றுக் கிழமை மாலை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை ஆளங்குளம் வீதியில் வைத்து சந்தேகநபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் அட்டாளைச்சேனை 5 பகுதியை சேர்ந்த 73 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேகநபர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 9 கிராம் 880 மில்லிகிராம் உட்பட சந்தேகநபர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிவஷங்கர் ஜீக்கு கபிலநதி தீரத்தில் கௌரவம்

அம்பாறை, ஒக். 25

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவஷங்கர் ஜீ, கபிலநதி தீரத்தில் பொன் வஸ்திரம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

பன்னிரண்டாவது வருடமாக கபிலவத்தை புனித யாத்திரையை சமய முறைப்படி ஒழுங்கமைத்து முன்னெடுத்து வருகின்றமையை முன்னிட்டு இக் கௌரவம் அளிக்கப்பட்டது.முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் விபுலமண்பதி காரைதீவு சார்பாக ஆன்மீக ஆர்வலர்களான மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய தர்மகர்த்தா ஜெயசிறில், ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் ஷங்கர் ஜீக்கு பொன் வஸ்திரம் அணிவித்து கௌரவித்தனர்.

அச்சமயம் சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன், ஆலோசகர் நமசிவாய மகேஸ்வரன் சுவாமி மற்றும் கல்முனை கபிலன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

# உக்ரைன் ‘அழுக்கு வெடிகுண்டு’ பயன்படுத்தி பழியை எம் மீது போடத் திட்டமிடுகின்றது!

## ரஷ்யா குற்றச்சாட்டு

மொஸ்கோ, ஒக். 25

கதிரியக்க அழுக்கு குண்டை உக்ரைன் வெடிக்க வைத்து, தம் மீது குற்றம்சுமத்த திட்டமிட்டுள்ளதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

ரஷ்யா பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு ஞாயிற்றுக் கிழமை பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி பாதுகாப்பு அமைச்சர்களுடனான தொலைபேசி கலந்துரையாடலில் இதனை தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஒரு அழுக்கு வெடிகுண்டுடன் மோதலை அதிகரிக்கக்கூடும் என்று ஷோய்கு கூறினார் - இது கதிரியக்கக் கழிவுகளை சிதறடிக்க வெடிமருந்துகளைப் பயன்படுத்தும் சாதனம். இது அணு வெடிப்பின் பேரழிவு விளைவைக் கொண்டிருக்காவிட்டாலும், பரந்த பகுதிகளை கதிரியக்க மாசுபாட்டை ஏற்படுத்தும்.

“உக்ரைனிய நாடக அரங்கில் பேரழிவு ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தியதாக குற்றம் சாட்டுவதும், அதன் மூலம் ரஷ்யா மீதான நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கில் உலகில் சக்திவாய்ந்த ரஷ்ய எதிர்ப்பு பிரச்சாரத்தை நடத்துவதும் ஆத்திரமூட்டலின் நோக்கம்” என்று சுஜயு நோவோஸ்டி செய்தி நிறுவனம் டெலிகிராமில் தெரிவித்துள்ளது. .“ஆத்திரமூட்டல் அமைப்பாளர்களின் கணக்கீடு என்னவென்றால், இது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால், உக்ரைனில் நடந்த ‘அணுசக்தி சம்பவத்திற்கு’ பெரும்பாலான நாடுகள் மிகவும் கடுமையாக நடந்து கொள்ளும்” என்று அந்த இடுகை கூறியது. “இதன் விளைவாக, ரஷ்யா அதன் பல முக்கிய பங்காளிகளின் ஆதரவை இழக்கும்.”

ரஷ்யா தனது குற்றச்சாட்டை நிரூபிக்க எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை.

எனினும், உடனடியாக உக்ரைனும், அமெரிக்காவும் இதனை மறுத்துள்ளன.

“ஐரோப்பாவின் இந்தப் பகுதியில் யாரேனும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த முடியும் என்றால் - அது ஒரே ஒரு ஆதாரமாக மட்டுமே இருக்க முடியும் - அந்த ஆதாரம்தான் தோழர் ஷோய்குவை இங்கே அல்லது அங்கே தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கட்டளையிட்டது” என்று உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தனது வீடியோ செய்தியில் கூறினார்.

வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா, அழுக்கு வெடிகுண்டு பற்றிய “ரஷ்ய பொய்கள்” “அபத்தமானது எவ்வளவு அபத்தமானது” என்றார்.

“முதலாவதாக, உக்ரைன் ஒரு உறுதியான அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்த உறுப்பினர்: எங்களிடம் எந்த ‘அழுக்கு வெடிகுண்டுகளும்’ இல்லை அல்லது எதையும் வாங்கும் திட்டமும் இல்லை,” என்று அவர் கூறினார். “இரண்டாவதாக, ரஷ்யர்கள் தங்களைத் திட்டமிடுவதைப் பற்றி மற்றவர்களை அடிக்கடி குற்றம் சாட்டுகிறார்கள்.” என்றார்.

ஷோய்கு மூன்று நாட்களில் இரண்டாவது முறையாக ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைவர் லாயிட் ஆஸ்டினுடன் பேசினார். தொடர்ந்து பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி ஆகிய மூன்று நேட்டோ நாடுகளில் உள்ள பாதுகாப்புத் துறை தலைவர்களுடன் பேசினார்.

ஆஸ்டினுடனான உரையாடல் குறித்த விவரங்களை ரஷ்யா வழங்கவில்லை, மே மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக வெள்ளிக் கிழமை இருவரும் பேசிய பிறகு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பேசினார்கள்.

மற்ற அழைப்புகளில் உக்ரைனில் நிலைமை கணிசமாக மோசமாகி வருவதாக ஷோய்கு கூறினார்.

“அவர்கள் உக்ரைனில் நிலைமையை விவாதித்தனர், அது வேகமாக மோசமடைந்து வருகிறது,” என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டின் லெகோர்னுவுடன் ஷோய்குவின் அழைப்பு பற்றி கூறினார். “இது மேலும் கட்டுப்பாடற்ற அதிகரிப்பை நோக்கி செல்கிறது.”

ஆஸ்டின் ஷோய்குவிடம் உக்ரைனில் “ரஷ்ய விரிவாக்கத்திற்கான எந்தவொரு சாக்குப் போக்கை நிராகரித்தார்” என்று பென்டகன் கூறியது.



# சூடானில் பழங்குடியினர் சண்டையில் இறந்தவர்களின் எண்ணிக்கை 220 பேர்!

கார்ட்டூம், ஒக். 25

தெற்கு சூடானில் நடந்த பழங்குடியினரின் சண்டையில் இறந்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது 220 ஆக உயர்ந்துள்ளது. இது சமீபத்திய ஆண்டுகளில் இன வன்முறையின் மிக மோசமான அத்தியாயங்களில் ஒன்றாகும்.

எத்தியோப்பியா மற்றும் தெற்கு சூடானின் எல்லையான புளூ நைல் மாகாணத்தில் நிலப்பிரச்சினை காரணமாக இந்த மாதம் சண்டை மூண்டது.

இது பெர்டா சமூகத்திற்கு எதிராக மேற்கு ஆபிரிக்கா முழுவதும் பிறப்பிடமாகக் கொண்ட ஹவுசா மக்களால் தூண்டப்பட்டது.

எத்தியோப்பியாவின் எல்லையில் உள்ள வாட் அல்-மஹி நகரில் புதன் மற்றும் வியாழன் அன்று பதற்றம் அதிகரித்தது. உள்நாட்டு மோதல்கள் மற்றும் அரசியல் குழப்பங்களில் சிக்கித் தவிக்கும் நாட்டின் நிலைமையை இது மோசமாக்கியது.

பெரிய எண்ணிக்கையிலான உடல்கள் மற்றும் டசின் கணக்கான காயமடைந்தவர்களைக் கணக்கிடுவது உட்பட, நிலைமையை மதிப்பிடுவதற்காக, முதல் மனிதாபிமான மற்றும் மருத்துவத் தொடரணி சனிக் கிழமை பிற்பகுதியில் வாட் அல்-மஹியை அடைந்ததாக புளூ நைல் சுகாதார அமைச்சின் தலைமை இயக்குநர் பாத் அர்ரஹ்மான் பகீத் தெரிவித்துள்ளார். (அ)



# சோமாலியா நாட்டில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 9 பேர் உயிரிழப்பு, 47 பேர் படுகாயம்

கிஸ்மாயு, ஒக். 25

சோமாலியா நாட்டின் துறைமுக நகரமான கிஸ்மாயுவில் உள்ள ஒரு ஓட்டலுக்குள் திடீரென புகுந்த தீவிரவாதிகள் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

மேலும் அந்த ஓட்டலின் நுழைவு வாயில் மீது கார் வெடிகுண்டு மூலம் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த கொடூர தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 47 பேர் படுகாயம் அடைந்தனர். சோமாலியாவில் செயல்பட்டு வரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான அல்-ஷபாப் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

இது குறித்த தகவல் அறிந்து, அங்கு விரைந்த சோமாலிய பாதுகாப்பு படையினர் பதில் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளின் முற்றுகையை முடிவுக்கு கொண்டு வந்ததுடன், அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த ஏராளமான பொதுமக்கள் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# 3 ஆவது முறையாக சீன அதிபரான ஜின்பிங்கிற்கு பாகிஸ்தான் வாழ்த்து

இஸ்லாமாபாத், ஒக். 25

சீன தலைநகர் பிஜீங்கில் நடைபெற்ற கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய மாநாட்டின் முடிவில் ஜி ஜின்பிங் மீண்டும் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் 3ஆவது முறையாக அவர் சீனாவின் அதிபராகவும் தேர்வானார்.

இந்த நிலையில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கு வாழ்த்து தெரிவித்து பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், சீன அதிபர் ஜி ஜின்பிங் பாகிஸ்தானின் உண்மையான நண்பர் என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷரீப், வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஒட்டு மொத்த பாகிஸ்தான் சார்பாக தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

சாமர்த்தியமான பணி திறனுக்கும், சீன மக்களுக்குச் சேவையாற்றுவதில் அசைக்க முடியாத பக்திக்கும் இது அவருக்கு கிடைத்த ஒரு பிரகாசமான கவுரவம் என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)





# இருவரும் சேர்ந்து தங்கள் நாடுகளுக்கான அழகான எதிர்காலத்தைக் கட்டமைப்போம்

## வாழ்த்துச் செய்தியில் கிம்

பியொங்யாங், ஒக். 25

இருவரும் சேர்ந்து தங்கள் நாடுகளுக்கான அழகான எதிர்காலத்தை கட்டமைப்போம் என சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் ஸி ஜின்பிங், மூன்றாவது முறை ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டதற்கு உலகத் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், வடகொரிய தலைவர் கிம் ஜோங், சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கிற்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

இதேவேளை, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ‘நமது நாடுகளுக்கிடையேயான மூலோபாய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் எங்கள் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் நெருக்கமான, பொதுவான பணிகளைத் தொடர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்’ என்று குறிப்பிட்டுள்ளார். (அ)



# கடைசிப் பந்து வரை போராட்டம்: வங்கத்திடம் வீழ்ந்தது நெதர்லாந்து!

ஹோபார்ட், ஒக். 25

இறுதிப் பந்துவரை பரபரப்பை ஏற்படுத்திய போட்டியில் பங்களாதேஷ் 9 ஓட்டங்களால் நெதர்லாந்தை வெற்றி கொண்டது.

இருபது -20 உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. சுப்பர் 12 சுற்று போட்டிகளில் நேற்று நடந்த போட்டியில் பங்களாதேஷ் - நெதர்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பங்களாதேஷ் நிர்ணயித்த 145 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துடுப்பெடுத்தாடியது நெதர்லாந்து. கடைசிவரை நெருக்கமாக போராடிய போதும் அந்த அணி தோல்வியடைந்தது.

நெதர்லாந்தின் முதல் இரண்டு விக்கெட்கள் தஸ்கின் அஹமதின் முதல் ஓவரின் முதல் இரு பந்துகளில் வீழ்த்தப்பட்டன. தஸ்கின் அஹமத் 4ஆவது ஓவரையும் வீசினார். இதில் மேலும் 2 விக்கெட்கள் சரிய மொத்த எண்ணிக்கை 15 ஓட்டங்களாக இருந்தது.

இதனால், துடுப்பாட்டத்தில் நிதானம் காட்டியது நெதர்லாந்து.அணித் தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ரிவேர்ஸ் ஸ்வீப் ஆட முயன்று ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்துக்கொண்டிருக்க கொலின் அல்டர்மன் பொறுமையுடனும் இடையிடையே அதிரடியும் காட்டினார்.

இறுதியில், அவர் 48 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 62 ஓட்டங்களைப் பெற்று 9ஆவதாக ஆட்டமிழக்க (101 - 9 விக்.) நெதர்லாந்தின் வெற்றிக்கான எதிர்பார்ப்பு தகர்ந்துபோனது.

11ஆம் இலக்க வீரர் போல் வென் மீக்கெரென் 14 பந்துகளை எதிர்கொண்டு 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 24 ஓட்டங்களைப் பெற்றபோதிலும் பங்களாதேஷின் வெற்றியை அவரால் தடுக்க முடியவில்லை.

கடைசி விக்கெட்டில் பிரெட் கிளாசெனுடன் 34 ஓட்டங்களைப் பகிர்ந்த மீக்கெரென் கடைசிப் பந்தில் ஆட்டமிழக்க பங்களாதேஷ் 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மிகத்துல்லியமாக பந்துவீசிய தஸ்கின் அஹ்மத் 4 விக்கெட்களையும் ஹசன் மஹ்முத் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

நஜ்முல் ஹுசைன் ஷன்டோ, சௌம்ய சர்கார் ஆகிய இருவரும் 5.1 ஓவர்களில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

இருவரும் அடுத்தடுத்த ஓவர்களில் ஆட்டமிழக்க, முதல் 5 விக்கெட்கள் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தன.

நஜ்முல் ஹுசைன் ஷன்டோ 25 ஓட்டங்களையும் சௌம்யா சர்க்கார் 14 ஓட்டங்களையும் பெற்றனர். லிட்டன் தாஸ் (9), அணித் தலைவர் ஷகீப் அல் ஹசன் (7), யாசிர் அலி (3) ஆகிய மூவரும் ஒற்றை இலக்க எண்ணிக்கைகளுடன் வெளியேறினர்.

எனினும் அபிவ் ஹுசைன், நூருல் ஹசன் ஆகிய இருவரும் 6ஆவது விக்கெட்டில் 44 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 120 ஓட்டங்களாக உயர்த்தினர். நூருள் ஹசன் 13 ஓட்டங்களையும் அபிவ் ஹுசைன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாசிர் அலி (3), தஸ்கின் அஹ்மத் (0) ஆகிய இருவரும் வந்தவேகத்தில் ஆட்டமிழந்து சென்றனர். மொசாடெக் ஹுசைன் 12 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களைப் பெற்று பங்களாதேஷின் மொத்த எண்ணிக்கையை 144 ஓட்டங்களாக உயர்த்தினார்.

நெதர்லாந்து பந்துவீச்சில் போல் வென் மீக்கெரென், பாஸ் டி லீட் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)

# பாகிஸ்தான் அணியை பழிதீர்த்தது இந்தியா!

மெல்பர்ன், ஒக். 25

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இதில் விராட் கோலி 82 ஓட்டங்களை குவித்திருந்தார்.

இருபது -20 உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. சுப்பர் 12 சுற்று போட்டிகளில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதன்படி, பாபர் அஸாம் - முஹமது ரிஸ்வான் இணை பாகிஸ்தானுக்கு தொடக்கம் கொடுத்தது. பொறுமையாக ஆட்டத்தை தொடங்கிய இந்த இணையை 2 ஓவரில் அர்ஷ்தீப் சிங் பிரித்தார். அவர் வீசிய பந்தில் எல். பி. டபள்யூ. முறையில் ஆட்டமிழந்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார் பாபர் அஸாம். 4ஆவது ஓவரில் 4 ஓட்டங்களுடன் ரிஸ்வானும் வெளியேற 5 ஓவர்களில் 2 விக்கெட்டை இழந்து 24 ஓட்டங்களுடன் தடுமாறியது பாகிஸ்தான்.

அடுத்த வந்த இப்திகார் அகமது அணிக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் அதிரடி காட்டினார். அவருடன் ஷான் மசூத் கைகோத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயற்சித்தனர். 34 பந்துகளில் 51 ஓட்டங்களை குவித்த இப்திகார் அகமதை முஹம்மத் ஷமி எல். பி. டபள்யூ. முறையில் வெளியேற்ற 13 ஓவரில் 3 விக்கெட்களை இழந்து 96 ஓட்டங்களை சேர்த்திருந்தது பாகிஸ்தான்.



அடுத்தடுத்து வந்த வீரர்கள் ஷதாப் கான் (5) ஹைதர் அலி (2) முஹமது நவாஸ் (9) சொற்ப ஓட்டங்களில் நடையைக்கட்ட, 16 ஓவரிலேயே 6 விக்கெட்டை இழந்த பாகிஸ்தான் 116 ஓட்டங்களை சேர்த்திருந்தது. ஷான் மசூத் மட்டும் ஒரு புறம் நிலைத்து ஆட எதிர்புறம் வந்த வீரர்கள் நிலைக்கவில்லை. ஷஹீன் அப்ரிடி ஆட்டத்தை மாற்ற முயற்சித்து 8 பந்துகளில் 16 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். இதனால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்த பாகிஸ்தான் 159 ஓட்டங்களை சேர்த்தது.

இந்திய அணியின் பந்துவீச்சில் அர்ஷ்தீப் சிங், ஹர்திக் பாண்ட்யா தலா 3 விக்கெட்களையும், முஹமது சமி ஒரு விக்கெட்டையும், புவனேஸ்குமார் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு கே. எல். ராகுல் - ரோஹித் சர்மா இணை தொடக்கம் கொடுத்தது. ஆனால், இரண்டாவது ஓவரிலேயே 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். அவரைத்தொடர்ந்து விராட் கோலி களமிறங்க, ஹாரிஸ் ரவூப் வீசிய பந்தில் பிடியெடுப்பாகி வெளியேறினார்

அணித் தலைவர் ரோஹித் சர்மா. 4 ஓவரில் 17 ஓட்டங்களை சேர்த்திருந்த இந்திய அணி 2 விக்கெட்களை பறிகொடுத்திருந்தது. அடுத்து வந்த சூர்ய குமார் யாதவ் (15), அக்சர் பட்டேல் (2) ஓட்டங்களுடனும் வெளியேற 6 ஓவரில் 4 விக்கெட்களை இழந்து 32 ஓட்டங்களுடன் தடுமாறியது இந்திய அணி.

இதையடுத்து அணி ஹார்திக் பாண்ட்யா - விராட் கோலி இணை பாகிஸ்தானின் பந்துவீச்சுகளை சிதறடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக உயர்த்தினர். விராட் கோலி 53 பந்துகளில் 82 ஓட்டங்களை குவித்து அதிரடி காட்டினார். ஹார்திக் பாண்ட்யா 37 பந்துகளில் 40 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் ஒரு பந்துக்கு ஓர் ஓட்டம் என்ற சூழலில் அஸ்வின் ஓர் ஓடி இலக்கை அடைந்தார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஹரிஷ் ரவூப், முஹமது நவாஸ் தலா இரண்டு விக்கெட்களையும், நசீம் ஷா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# விராட் கோலியை தூக்கி கொண்டாடிய ரோஹித்

சென்னை, ஒக். 25

நடப்பு இருபது - 20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றில் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானை 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது. இந்த வெற்றிக்கு உறுதுணையாக இந்திய அணியின் வீரர் கோலியின் ஆட்டம் அமைந்தது. இந்திய அணி வெற்றி பெற்றதும் மைதானத்தில் கோலியை அலேக்காக தூக்கி கொண்டாடினார் இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா.

ரோஹித் சர்மா, கோலியை தூக்கிய அந்த தருணம் அவரது அபாரமான இனிங்ஸுக்கு கொடுக்கப்பட்ட மரியாதை என்று சொல்லலாம். 53 பந்துகளில் 82 ஓட்டங்களை சேர்த்திருந்தார் கோலி. இதில் 6 பௌண்ட்ரிகள் மற்றும் 4 சிக்ஸர்கள் அடங்கும். 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து ஒரு கட்டத்தில் தடுமாறிக் கொண்டிருந்தது இந்தியா. ஆனால், அதை அப்படியே மீட்டெடுத்து வந்து அணிக்கு வெற்றையைக் கொடுத்தனர். கோலியும், பாண்ட்யாவும். இருவரும் 113 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 3 இலங்கை வீரர்கள் ஆஸி. செல்கின்றனர்

கொழும்பு, ஒக். 25

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்று விளையாடிவரும் இலங்கை வீரர்கள் பலர் உபாதையால் அவதிப்படுவதுடன் சிலர் நாடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், மேலும் 3 வீரர்களை இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி, விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான நிரோஷன் டிக்வெல்ல, வேகப்பந்து வீச்சாளர்களான அசித பெர்னாண்டோ மற்றும் மதீஷ பத்திரண ஆகியோரை உயர் செயல்திறன் அதிகாரியான டிம் மெக்காஸ்கிலுடன் அவுஸ்திரேலியாவுக்கு பயிற்சிக்கு அனுப்ப இலங்கை கிரிக்கெட் தீர்மானித்துள்ளது.

இலங்கை அணியின் முக்கிய 5 வீரர்கள் இம்முறை இடம்பெற்றுவரும் இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் உபாதைக்குள்ளாகியுள்ளனர். டில்ஷான் மதுஷங்க, துஷ்மந்த சமீர, மற்றும் தனிஷ்க குணதிலக்க ஆகியோர் உலகக் கிண்ணப் போட்டியின் போது காயமடைந்த நிலையில் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, பிரமோத் மதுஷன் மற்றும் பதும் நிஸங்க ஆகியோர் சிறு காயங்களுடன் தற்போது அணியில் உள்ளனர்.

# சூரிய கிரகணம் இன்று!

கொழும்பு, ஒக். 25

சூரிய கிரகணம் இன்று செவ்வாய்க்கிழமை ஏற்படும் என ஆர்தர் சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் முழுமையாக 22 நிமிடங்களுக்குத் தெரியும் எனவும் கொழும்பில் மாலை 5.43 மணி முதல் 5.52 மணி வரை மட்டுமே அவதானிக்க முடியும்.

சூரிய கிரகணத்தின் அதிகபட்ச கிரகணம் மாலை 5.49 மணிக்கு நிகழும், அதன் முடிவு மாலை 6.20 க்கும் நிகழும்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை, பகுதி கிரகணம் மாலை 5.27 மணிக்குத் தொடங்குகிறது. அதிகபட்ச கிரகணம் மாலை 5.46 மணிக்கு 8.8 வீத சூரியன் சந்திரனால் மூடப்பட்டிருக்கும். மாலை 6.20 மணிக்கு கிரகணம் நிறைவடைந்தாலும், மாலை 5.49 மணிக்கு சூரியன் மறையும் வரை மட்டுமே இந்த கிரகணத்தை 22 நிமிடங்களுக்கு யாழ்ப்பாணத்தில் காண முடியும்.

லட்சத்தீவு மக்களுக்கு குறைவாகவே தெரியும் என ஆர்தர் சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது. (அ)

# யானையுடன் மொட்டு இணைந்து புதிய கூட்டு!

## மீண்டும் அன்னம் சின்னம்

கொழும்பு,ஒக்.25

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள முக்கிய சில புள்ளிகள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து புதியதொரு கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.**

இதற்கான பேச்சுகள் வெற்றியை நோக்கி நகர்கின்றன எனவும், ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்கவின் மத்தியஸ்தத்துடனேயே பேச்சுகள் தொடர்கின்றன எனவும் சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த வருடம் ஆரம்பத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் இந்தக் கூட்டணி போட்டியிடும் எனவும், "அன்னம்" புதிய கூட்டணியின் சின்னமாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டி, கம்பஹா, காலி, பொலனறுவை, பதுளை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மொட்டு கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்தக்கூட்டணியில் இணையவுள்ளனர்.

அதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய தூண்களில் ஒருவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், விரைவில் தீர்க்கமானதொரு அரசியல் முடிவொன்றை எடுக்கவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. (அ)

# இலங்கையிலிருந்து நேற்றும் நால்வர் தமிழகத்தில் தஞ்சம்!

கொழும்பு, ஒக். 25

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக நேற்றும் 4 பேர் அகதிகளாகத் தமிழகம் சென்றுள்ளனர்.

மன்னாரிலிருந்து படகு மூலம் தப்பிச் சென்றவர்கள் இந்தியாவின் ஆளுகையின் இராமேஸ்வரத்தில் நேற்று அதிகாலை தரை இறக்கி விடப்பட்டனர்.

அவர்களை அவதானித்த தமிழகப் மீனவர்கள் மறாயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து அகதிகள் நின்ற இடத்துக்குச் சென்ற பொலிஸார், நால்வரையும் மீட்டு இராமேஸ்வரத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவர்கள் தற்போது பொலிஸாரின் விசாரணையில் உள்ளனர்.

நால்வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், திருகோணமலை மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. (அ)

# கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலை நினைவு நேற்று

யாழ்ப்பாணம்,ஒக். 25



யாழ்ப்பாணம்-கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட படுகொலையின் 35 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று காலை 9.30 மணியளவில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களின் உறவினர்களாலும், அப்பகுதி மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில உயிரிழந்தவர்களுக்காக சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1987 ஒக்ரோபரில் இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில், ஆனைக்கோட்டைப் பகுதி யைச் சேர்ந்த பல மக்கள் பாதுகாப்புக்குருதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சம டைந்தார்கள்.

1987 ஒக்ரோபர் 24ஆம் திகதி காங்கேசன் துறை வீதி வழியாக யாழ்.நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொதுமக்கள் தங்கியிருந்த பாடசாலை கட்டிடங்கள் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூன்று சிறுவர்களைக் கொண்டு மசாஜ் செய்வித்த பிக்கு கைது!

கொழும்பு, ஒக். 25

காலி பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் மூன்று சிறார்களை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் அங்குள்ள சிரேஷ்ட பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சிறார் பிக்கு உள்ளிட்ட மூன்று சிறார்களையும் தனது உடலை மசாஜ் செய்ய மூத்த பிக்கு நிர்ப்பந்திக்கும் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

அங்கு நடத்தப்பட்ட விசாரணைகளின்படி, சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிக்கு தெரணம நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் காணொளியில் ஒரு மூத்த பிக்கு, இரண்டு சிறு குழந்தைகள் மற்றும் ஒரு சிறு பிக்குகளை தனது உடலை மசாஜ் செய்ய வைப்பது பதிவாகியுள்ளது.

ஒரு விடயத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது சிறுவன் ஒருவரின் முகத்தில் மூத்த பிக்கு அடிப்பதையும் வீடியோ காட்டுகிறது. (அ)

# இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றிருந்தால் உடன் சபையில் இருந்து விலகவேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, ஒக். 25

நீதிமன்றத் தீர்ப்பைத் தவிர, வேறு எந்த முறையிலும் இரட்டை பிரஜாவுரிமை தொடர் பான அறிவிப்பை வெளியிட முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இரட்டைக் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவியை வகிக்கத் தகுதியற்றவர்கள்.

எவ்வாறாயினும், தற்போது நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் இரட்டைக் பிரஜாவுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரா என் பதை ஒரே நேரத்தில் அறிவிக்க முடியாது என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இரட்டை பிரஜாவுரிமை பெற்றிருந்தால், அவர் உடனடியாக சபையில் இருந்து விலக வேண்டும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தலின் போது வேட்புமனுக்களை ஏற்கும் போது இரட்டைக் குடியுரிமை குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும், இது தொடர்பாக ஒரு தரப்பு அறிக்கை அளித்தால் மட்டுமே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இரட்டைக் பிரஜாவுரிமை கொண்ட பாராளு மன்ற உறுப்பினர்கள் இருப்பின் சட்டங்கள் அமுல்படுத்தப் படுவதற்கு முன்னர் அவர்கள் உடனடியாக தமது பதவிகளில் இருந்து விலக வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார். அ)

# நாவற்குழி நெற் செய்கையாளர்கள் இலவச உரத்துக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 25

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற் செய்கையாளர்கள் இலவச சூழல் நேய உரங்களைப் பெற விண்ணப்பிக்குமாறு நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு கோரியுள்ளது.

குறித்த விண்ணப்ப படிவங்களை நெற்செய்கையாளர்கள் கமக்கார அமைப்பிடம் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் விண்ணப்பித்தவர்களுக்கு சூழல் நேய உரங்களான சேதனப் பசளை மற்றும் திரவ உரங்கள் என்பன இலவசமாக வழங்கப்படவிருப்பதாகவும் நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு தெரிவித்துள்ளது. இதேவேளை குறித்த பதிவுகளை கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட ஏனைய கமக்கார அமைப்புகளும் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இன்று...

ஜயரத்ன குறிப்பிட்டார்.

இன்று மாலை 5.27 மணியளவில் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியும். சுமார் 22 செக்கன்கள் வெற்றுக் கண்களால் பார்வையிட முடியும். கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் மேலும் தெரிவித்தார். (ஐ)

## இந்தியா...

நாடாகவும் - வல்லரசாகவும் - உடனடி அயல் நாடாகவும் உள்ளது. அது மட்டுமின்றி இது ஒரு சம்பிரதாயபூர்வ நிகழ்வாகவும் உள்ளது.

இதனால், இலங்கை அரசாங்கம் எப்போது கேட்டாலும், உடனடியாக புதிய ஜனாதிபதி இந்தியா வருவதற்கு அழைப்பு விடுத்து - நேரம் ஒதுக்குவது வழக்கம். ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இந்தியாவிடம் சந்திப்புக்கு அனுமதி கோரிய போதும், அந்த நாட்டு அரசாங் கம் அனுமதி வழங்காமல் மௌனம் காத்து வருகிறது. இது ஏன் என்று சரியாகத் தெரியவரவில்லை. ஆனால், அரசாங்கம் தொடர்ந்து கோரிக்கை விடுத்த போதிலும், இந்தியா சாதகமான பதிலை வழங்காதது ஒரு தனித்துவமான புதிய போக்கு என்றே கருதப்படுகின்றது.

இருப்பினும், நரேந்திர மோடி அரசாங்கம் திருப்திகரமான பதில் ஒன்றை அளிக்காததால், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொடவை இந்த விடயத்தில் தலையிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், தனது பணிப் பொறுப்புக்கு மேலதிகமாக இந்திய அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளுடன் நெருக்கமான உறவுகளை அவர் கொண்டிருப்பதுதான். இதனை அடுத்து மிலிந்த மொறகொட, தனது சொந்த தொடர்புகளை பயன்படுத்தி கடந்த வாரம் முதல் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை - ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முன்னர், பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவு நடைபெறுவதற்கு முதல் நாளில் டலஸ் அழகப்பெருமவுக்கு அல்லது சஜித் பிரேமதாஸ தரப்புக்கு வாக்களிக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலய உயர் அதிகாரி ஒருவர் அறிவுறுத்தினார் என்ற தகவல்கள் உடனடியாகவே கசிந்திருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது.

(ஐ-சி)

## கிணற்றில்...

கணேசலிங்கம் லம்போசிகன் (வயது -24), பண்ணையம்பதி பருத்தித்துறையை சேர்ந்த சுசிந்திரகுமார் சசிகாந்தன் (வயது - 24) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் நண்பர்கள் இணைந்து தோட்டக் காணி ஒன்றில் மதுபானம் அருந்தியுள்ளனர். இவர்கள் வீடு திரும்பும் நோக்கில் சென்றபோது தோட்டக் கிணற்றில் ஒருவர் தவறி விழுந்துள்ளார். அவரை காப்பாற்றுவதற்காக அவரின் நண்பரும் கிணற்றில் குதித்துள்ளார். எனினும் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் முதல் கட்ட தகவல்கள் தெரிவித்தன.

மீட்கப்பட்ட இருவரின் சடலங்களும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## இங்கிலாந்து...

யினரான இவர் 1812ஆம் ஆண்டு பதவியிலிருந்த லிவர்பூல் பிரபுவின் பின்னர் பதவிக்கு வந்த இளமையான பிரதமர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். மேலும், இவர் முதன்முதலில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து பிரதமராக தெரிவு செய்யப்படுவதற்கு 7 வருடங்களே எடுத்துள்ளன. அதுவும் அமைச்சராக பொறுப்பேற்று வெறுமனே இரண்டு வருடங்களுக்குள்ளாகவே பிரதமர் பதவியை அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமராக தெரிவாகியுள்ள ரிஷி சுனக் 7 வாரங்களுக்கு பதவியேற்றுள்ள கன்சவேர்ட்டிவ் கட்சியின் மூன்றாவது பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பதவியில் இருந்த பொறிஸ் ஜோன்சன் பதவி விலகினார். கன்சவேர்ட்டிவ் கட்சி யாப்பின்படி தலைவரே பிரதமராக பதவி வகிக்கலாம். இதனால், அந்தக் கட்சியின் தலைமை பதவிக்கு ரிஷி சுனக்கும் லிஸ் ட்ரஸூம் போட்டியிட்டனர். இதில், ட்ரஸ் வெற்றி பெற்றார். பிரதமராக பதவியேற்ற அவர் செல்வந்தர்களுக்கு வரி சலுகை விவகாரத்தில் சர்ச்சையை எதிர்கொண்டார். இதையடுத்து எழுந்த எதிர்ப்புகளை தொடர்ந்து அவர் 45 நாட்களில் பதவி விலகினார்.

இதையடுத்து, கன்சர்வேட்டிவ் கட்சிக்கான தலைவர் தேர்தலில் ரிஷி சுனக் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றார். இதனிடையே அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் மற்றும் பென்னி மார்டன்ட் ஆகியோர் விலகியமையை அடுத்து ரிஷி சுனக் கன்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவராகப் போட்டியின்றி தெரிவாகியுள்ளார்.

விரைவில் அவர் பிரதமராகப் பதவியேற்கவுள்ளார். மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். (ஐ)

## ஜனாதிபதி...

முக்கியத்துவம் வாய்ந்த நவராத்திரி விழா இம்முறை ஜனாதிபதி சார்பில் கொண்டாடப்படவில்லை. இது தொடர்பில் இந்து மதத்தவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறைப்பட்டிருந்தனர். இதனை டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார். அத்துடன், தீபாவளி பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்திருந்தார் என்று அமைச்சர் தனது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## ஆட்சியில்...

ஊடாக தேசிய இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம். வழமைபோல் இலங்கை அரசாங்கம் இந்தக் கருமத்தை செய்யாமல் இழுத்தடிக்க முடியாது. கடந்த கால கசப்பான சம்பவங்களால் நாங்கள் விரக்தி நிலையில் நிற்கிறோம். எனவே, தீர்வு விடயத்தில் இலங்கை அரசாங்கம் அசண்டையீனமாக செயல் பட்டால் தமிழ் மக்களின் நலன் கருதி நாங்கள் தீர்க்கமான முடிவை எடுப் போம்.

சர்வதேச சமூகத்தை இந்தக் கருமத்தில் நேரடியாகப் பங்கெடுக்கச் செய்து தேசிய இனப்பிரச்னைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு வழிவகுக்குமாறு நாங்கள் கோருவோம். இலங்கையின் ஆட்சியில் எவர் இருந்தாலும் எம்மை இனிமேல் ஏமாற்றவே முடியாது - என்றார். (ஐ)

# ஜனாதிபதி தலைமையில் தீபாவளி கொண்டாட்டம்!






கொழும்பு, ஒக். 25

இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை சிறப்பு தீபாவளி நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் இந்து மத சம்பிரதாயங்களுடன் நிகழ்வு மிகவும் எளிமையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, மனுஷ நாணயக்கார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அகில விராஜ் காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜா மற்றும் பல முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.

(ஐ)

## அரசியல்...

பண்டிகையை ஒட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தார்.

இவ்வாறு பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட 8 பேர்களில் நால்வர் ஏற்கனவே விடுதலையாகினர். இதில் மூவரின் விடுதலை மேன்முறையீட்டு வழக்கால் தாமதமானது. இவர்களே தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா படுகொலை முயற்சியுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள்.

மூவரையும் விடுதலை செய்வதற்கு சந்திரிகா சம்மதம் தெரிவித்தமையை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட ஒருவர் புனர்வாழ்வின் பின்னரே விடுதலை செய்யப்படுவார் என்று நீதி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மருத்துவ...

மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும், மயக்க மருந்து தட்டுப்பாட்டால் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அரச மருத்துவ மனைகளில் பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகர ணங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளதாக அகில இலங்கை தனி யார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பன்டேஜ், பஞ்சு உள்ளிட்ட பல மருத்துவப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கடுமையான மயக்க மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இதன் காரணமாக, தனியார் மருந்தகங்களில் இருந்து மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு முடிவின்றி எமக்குத் தீபாவளி இல்லை!

## வவுனியாவில் உறவுகள் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 25

**காணாமல்போன எமது பிள்ளைகளுக்கு முடிவின்றி எமக்குத் தீபாவளி இல்லை என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

வவுனியாவில் பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தீபாவளித் திருநாளான நேற்று, தமது பிள்ளைகளும், உறவுகளும் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"நமது சைவ மதத்தில், அரக்கன் நரகாசுரனை வென்றமைக்கவே தீபாவளி கொண்டாடப்படுகின்றது. ஆனால், உண்மையில் கடந்த காலத்தில் தமிழர்களைக் கொன்ற அரக்கர்கள் இறந்த இந்த நாளை நாம் கொண்டாடுகின்றோம். அவர்களில் சிலரை நாம் பட்டியலிடலாம்.

நமக்குச் சுதந்திரம் கிடைத்ததும், நாம் அனைவரும் இந்தத் தீயவர்கள் பட்டியலை உருவாக்குவோம்.



வருங்காலத்தில், தமிழர்களைக் கொன்ற அரக்கர்களை, குறிப்பாக 2009ஆம் ஆண்டு அரக்கர்களையும், நமது சுதந்திரப் போரை முறியடிக்க உதவிய தமிழ் அரக்கர்களையும் நினைவுகூரும் இந்த நாளைத் தமிழர்களாகிய நாம் கொண்டாடுவோம்.

இந்த நாள் பேய்களை வென்றதைக் கொண்டாடும் நாள். தமிழர்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஐ.நாவின் கண்காணிப்பில் பொது வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் மட்டுமே இந்த நாளை நாம் எதிர் காலத்தில் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட முடியும்" - என்றனர். (அ)

# பகிடிவதையில் ஈடுபட்ட 19 மாணவர்களுக்கு தடை!

*யாழ்ப்பாணம், ஒக். 25*

*யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் துன்புறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட 19 சிரேஷ்ட மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.*

புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பதிவுகள் இடம்பெற்றுள்ள நிலையில், புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்குட்படுத்திய சிரேஷ்ட மாணவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது குற்றம் நிரூபிக்கப்பட்ட கலைப்பீடத்தைச் சேர்ந்த 14 பேருக்கு ஆறு மாத கால வகுப்புத் தடையும், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 4 பேருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும், விஞ்ஞான பீடத்தைத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக் கெதிரான தண்டனைச் சாசனத்தின் படி, குற்றங்களின் தன்மைக்கேற்ப விசாரணைக் குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைக் காலத்தை மாணவர் ஒழுக்காற்றுச் சபை சிபார்சு செய்தது. அந்த சிபார்சுகளுக்கமைய பேரவையினால் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. பேரவையின் தண்டனை குறித்த அறிவிப்பு அந்தந்த பீடாதிபதிகளின் ஊடாகத் துணைவேந்தரால் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனைக் காலத்தினுள் குறித்த மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட் டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள்ளும் செல்வதற்கும் தடை விதிக்கப்பட் டுள்ளது. மேலும் தண்டனைக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருப்பவராயின் விடுதியை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்த மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்துகளைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு

கொழும்பு, ஒக். 25

தற்போதைய வாகன விபத்துகளில் 40 வீதமானவை மோட்டார் சைக்கிள் விபத்துகளாக பதிவாகியுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் விபத்துகளை குறைப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் அன்ரன் டி மெல் தெரிவித்துள்ளார்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)




# 16 வாகனங்கள் பயன்படுத்திய முன்னாள் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஒக். 25

*2015-2019 காலகட்டத்தில் முன்னாள் சுகாதார அமைச்சரும், ஒரு இராஜாங்க அமைச்சரும் வரம்பை மீறி 24 வாகனங்களைப் பயன்படுத்தியதாக தேசியக் கணக்காய்வு அலுவலகம் கூறுகிறது.*

இதன்படி, சுகாதார அமைச்சர் 16 வாகனங்களையும், இராஜாங்க அமைச்சர் மேலும் எட்டு வாகனங்களையும் பயன்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அமைச்சர் வருடாந்த எரிபொருள் கொடுப்பனவாக 20 இலட்சம் ரூபாயும், இராஜாங்க அமைச்சர் 40 இலட்சம் ரூபாயையும் பெற்றுள்ளனர்.

அமைச்சர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை விட அவர்கள் மேலதிகமாக பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இதுவரை எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்றும் தேசியக் கணக்காய்வு அலுவலகம் கூறியுள்ளது. (அ)



# தீபாவளியை முன்னிட்டு நல்லூரில் சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 25

தீபாவளி தினத்தினை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சிறப்பு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கநிலை நீங்கி நாடு சுபீட்சமடையவும் விசேட பூசைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, ஒக். 25

இலங்கையின் முதலாவது நீர் மின் நீர்த்தேக்கமான காசல்ரீ நீர்தேக்கம் அதன் முழு கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில் அதன் தானியங்கி வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறி வருகின்றது.

இந்த தானியங்கி வான் கதவுகள் வழியாக நேற்றுக் காலை தொடக்கம் நீர் வெளியேறி வருகின்றது.

இந்த நீரானது களனி ஆற்றின் நீர் மட்டத்தை வெகுவாக அதிகரிக்கும் என்பதல் காசல்ரீ நீர்தேக்கத்தின் கீழ் பகுதியில் களனி ஆற்றின் கரையில் குடியிருப்பவர்களும் இந்த ஆற்றினை பயன்படுத்துபவர்களும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என நீர் தேக்கத்தின் கடமை நேர பொறியலாளர் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த பிரதேசத்திற்கு மழைப்பெய்து வருவதனால் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அதிகளவான நீர் விநியோகிக்கப்படுவதால் இந்த தானியங்கி வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று காலை 8 மணிக்கு மஸ்கெலியா மவுசாகலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் மூன்றும் ஒரே நேரத்தில் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. மவுசாகலை, கெனியோன், லக்ஷபான பொல்பிட் டிய, நவலக்ஷபான, விமல சுரேந்திர, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் நீர் வரத்தும் அதிகரித்துள்ளன. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.